பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 02 ஞாயிற்றுக்கிழமை (16-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:203


# தீவுப் பகுதியில் நாளை புலிகளுக்கு வரவேற்பு!

## அரசியல் பணிகளை ஆரம்பிக்க போராளிகள் குழு அங்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன்16

**குடாநாட்டின் தீவுப் பகுதியில் அரசியல் பணிகளை ஆரம்பிக்க விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை அனுமதிக்கும் விவகாரத்தில் இரு தரப்புகளுக்கும் இடையே புதிதாக இணக்கம் காணப்பட்டிருக்கிறது.**

**இதனையடுத்து புலிகள் இயக்கத்தின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் போராளிகள் குழுவொன்று நாளை திங்கட்கிழமை காலை தீவகம் செல்கின்றது. அங்கு அவர்களுக்கு மகத்தான வரவேற்பளிக்க மக்கள் தயாராகிவருகின்றனர்.**

புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிமுறைகளுக்கு அமைய குடாநாட்டில் தங்கள் அரசியல் பணிகளை ஆரம்பிக்க வந்த புலிகள் இயக்கப் போராளிகள் தீவுப் பகுதிக்குச் செல்ல அங்குள்ள கடற்படையினர் அனுமதி மறுத்ததை அடுத்து, இந்த விவகாரம் சிக்கலான ஒரு கட்டத்தை எட்டியிருந்தது.

தீவுப் பகுதிக்கு சென்ற போராளிகளை அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து கடற்படையினர் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பினர். போராளிகளை வரவேற்பதற்காகப் பொதுமக்கள் அங்கு திரள்வதையும் படையினர் தடுத்துவிட்டனர்.

தீவுக் கூட்டங்களை அதி உயர் பாதுகாப்பு வலயம் என்று வடபிராந்திய கடற்படைத் தளபதி அறிவித்

(14ஆம் பக்கம் பார்க்க)

### சயனைட் அணிந்துசெல்ல ஆட்சேபம் இல்லை

## தொலைத்தொடர்பு வசதிகளை புலிகளுக்கு படையினரே வழங்குவர்

யழ்ப்பாணம்,ஜூன்16

தீவகப் பகுதிக்குள் செல்லும் புலிகள் இயக்கப் போராளிகள் தங்களோடு தொலைத்தொடர்பு கருவிகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். புலிகள் பயன்படுத்துவதற்கான தொலைத்தொடர்பு வசதிகளை படையினரே அங்கு வழங்குவர்.

தகவலறிந்த வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

போராளிகள் தங்களோடு சயனைட் வில்லைகளை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கடற்படையினர் முன்னர் நிபந்தனை விதித்திருந்தனர். ஆனால புதிய இணக்கப்பாட்டின்படி புலிகள் சயனைட் வில்லைகளை அணிந்துவருவதைப் படையினர் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாளை தீவகத்துக்குச் செல்லும் போராளிகள் குழுவோடு கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும் உடன செல்வார் எனத் தெரிகிறது.

தீவகத்தில் பொதுமக்களுடன் கலந்துரையாடிய பின்னர் அங்கு அலுவலகம் அமைத்துச் செயற்படுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று புலிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## அரசு-புலிகள் பேச்சுக்கு நிகழ்ச்சி நிரல் பூர்த்தி

### அரச வானொலி தகவல்

கொழும்பு,ஜூன்16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் ஆரம்பமாகவிருக்கும் நேரடிப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை நோர்வே சமாதானக் குழுவினர் பூரணப்படுத்தியுள்ளனர் என்று நோர்வேத் தூதரகத்தை மேற்கோள்காட்டி அரச வானொலி நேற்று அறிவித்துள்ளது.

நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்க முன்னோடியாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வே (14ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்கள் தாக்கப்பட்டன

கொழும்பு,ஜூன்16

நுகேகொட சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் கொல்லப்பட்டார். இவர் வீதியைக் கடக்கையில் தனியார் பஸ் ஒன்றுடன் மோதுண்டார். மற்றும் இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் அப்பகுதியால் வந்த அனைத்து பஸ்களையும் தாக்கியுள்ளார்கள். சுமார் 20 தனியார் பஸ்களும் மற்றும் சில கடைகளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

விசேட பொலீஸ் அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும் அப்பகுதியில் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-6)



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம்.

### இன்பருட்டியில் நேற்றுக்காலை

## மீனவர்-படையினர் வாய்த்தர்க்கம்!

### வீதியில் தடை போட்டு மறியல்

யாழ்ப்பாணம்,ஜூன்.16

பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் மீனவர்களுக்கும் படையினருக்கும் இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தின் எதிரொலியாக மீனவர்கள் அப்பகுதியில் வீதித்தடை போட்டு மறியற்போராட்டத்தில் குதித்தனர்.

மீன்பிடித்து முடிந்து கரையை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த வள்ளங்களைக் குறிப்பிட்ட ஒரு பகுதி ஊடாகக் கரைக்கு வருவதற்குப் படையினர் அனுமதி மறுத்தனர் என்றும்-

இதையடுத்து மீனவர்களுக்கும் அங்கு நின்ற படையினருக்கும் வாயத்தர்க்கம் ஏற்பட்டது என்றும் -

ஆத்திரமடைந்த மீனவர்கள் தொண்டமனாறு - இன்பருட்டி வீதிக்குக் குறுக்கே தடைகளைப் போட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் உடற் பரிசோதனை 'பாஸ்' நடைமுறை நீங்கவில்லை

யாழ்ப்பாணம்,ஜூன்16

குடாநாட்டில் இரவு பகல் எந்நேரமும் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட போதும் பாஸ் நடைமுறை, உடற் பரிசோதனை என்பன தொடர்வதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

மீன்பிடிக்க இணக்கம் காணப்பட்ட நிலைகளில் இருந்து பகலில் மீன்பிடிக்கச் செல்லப் படையினர் அனுமதிக்கின்றனர். இரவு பகல் எந்நேரமும் ஆழ்கடல் வரை சென்று மீன்பிடிக்க அனுமதிக்கின்றனர்.

மீன்பிடிக்கச் செல்ல முன்னர் 'பாஸ்' பரிசீலனை, மீனவர் உடற் சோதனை செய்தல் ஆகியன அந்த நிலைகளில் வைத்து தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக மீனவர்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

### வன்னி - கிழக்கு கடல் பாதை

## புலிகள் கோரிக்கையை ஏற்க அரசு நான்கு நிபந்தனைகள்

யாழ்ப்பாணம்,ஜூன்16

வன்னிக்கும், கிழக்குப் பகுதிக்கும் இடையே கடல் வழியாகப் போக்குவரத்துப் செய்ய தனியான பாதை ஒன்றை அமைத்துத்தருமாறு புலிகள் விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்பதற்கு அரசு நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது.

★ புலிகள் தங்களுடைய பயணம் தொடர்பான செய்தியை 48 மணி நேரத்திற்கு முன்பாக தெரியப்படுத்த வேண்டும் -

★ ஆயுதப் படகுகளில் புலிகள் பயணம் செய்ய முடியும். ஆனால் அந்தப் படகில் ஆயுதங்களையோ வெடிமருந்துகளையோ ஏற்றிச் செல்லக்கூடாது.

★ பயணம் செய்யும் நபர்களுடைய விவரங்களை முன்னதாகவே அரசுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

★ பயணஞ் செய்யும் படகில் கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும உடனிருக்க வேண்டும் -

இவ்வாறு நான்கு நிபந்தனைகளை அரசு முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-6-9)

## 'புலிகளின் குரல்' நிறுவனத்தின் முத்தமிழ் கலையரங்கம் இன்று

### நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்16

'புலிகளின் குரல்' நிறுவனத்தால் மாதம்தோறும் நடத்தப்பட்டு வரும் மாதாந்த 'முத்தமிழ் கலையரங்கம்' இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது. இதில் தமிழீழத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் பங்குபற்றவுள்ளனர்.

★ சாம்பவி தணிகைமாறனின் நெறியாள்கையில் தமிழீழ நுண்கலைக்கல்லூரி வழங்கும் நடனம்-

★ தலைசிறந்த மருத்துவரும், தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட கலைஞருமான வைத்திய முனைவர் கெங்காதரனின் புல்லாங்குழல் கச்சேரி -

(02ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பிரதம தபாலக கட்டட வேலைகளை டிசெம்பருக்குள் பூர்த்திசெய்ய உத்தரவு!

யாழ்ப்பாணம்,ஜுன்16

யாழ்.பிரதம தபால் நிலையத்தின் கட்டட வேலைகளை எதிர்வரும் டிசெமபர் மாதத்துக்குள் பூர்த்திசெய்யு மாறு மக்கள் தொடர்பாடல், ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர் நேற்று உத்தரவிட்டார்.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நேற்றுக் காலை 9.50 மணியளவில் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அமைச்சருடன் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், முன்னாள் எம்.பி. அலிஸா ஹிர் மௌலானா உட்பட அமைச்சு அதிகாரிகள் பலரும் வந்திருந்தனர்.

யாழ்ப்பாணம் வந்த அமைச்சர், முதலில் சுன்னாகம் மற்றும் அச்சுவேலி தபால் நிலையங்களில் தொலைபேசிச் சேவைகளை ஆரம் பித்துவைத்தார்.

பின்னர் யாழ்.கோட்டையில் உள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தையும், கட்டப்பட்டுவரும் யாழ். பொதுநூல் நிலையத்தையும் பார்வையிட்டார். இவ்வேளையில் கடந்த யுத்தத்தினால் சேதமடைந்த யாழ். பிரதம தபால் நிலைய வளவுக்குச் சென்று அங்கு கட்டப்பட்டு வரும் புதிய பிரதம தபால் நிலையக் கட்டட வேலைகளைப் பார்வை யிட்டார். சுமார் 7 கோடி ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் இத்தபால் நிலையத்தின் கட்டடவேலைகள் ஐந்து வீதம் மாத்திரமே முற்றுப்பெற்றுள்ளன. ஆனால், ஒதுக்கப்பட்ட நிதியில் ஐம்பது வீதமான பணம் கையளிக்கப்பட்டு விட்டது. ஆதலால், இனிமேலும் தாமதிக்காது டிசெம்பர் மாதத்துக்குள் புதிய பிரதம தபால் நிலையக் கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என அமைச்சா உத்தரவிட்டார்.

(ஐ-10-ரி-173)

# கிளிநொச்சியில் இன்று இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜுன்16

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி டாக்டர் பொன்னம்பலம் வைத்தியசாலையில் நடைபெறவுள்ள இந்த மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள் சிகிச்சைகளை வழங்குவர்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத தலைவரும், யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளருமான செல்வி நவமலர் கனகரட்ணம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.குகதாசன், பொதுவைத தியநிபுணர் கே.மகேசன், சத் திர சிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ், பெண்நோயியல் நிபுணர் ஜி. பவானி ஆகியோரும் மற்றும் மருத்துவர்கள், தாதிமார்கள் ஆகியோரும் இந்த மருத்துவ முகாமில் பங்குபற்றவுள்ளனர்.

இந்த மருத்துவ முகாமின் போது கண்ணாடிகளைப் பெறத் தகுதியுடைய வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை -

இம்மருத்துவ முகாமிற்குச் செல்லும் வைத்தியர்கள் மற்றும் தாதிமார் ஆகியோர் இன்று ஞாயிறுக்கிழமை கண்டி வீதி (ஏ-9) வழியாக பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஒ-4-15-139)

# உலர் உணவு நிவாரண விநியோகம்

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 103 ஏ.பி. புள்ளிக்கான இலவச இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணத்தை நாளை 17ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் வழங்கவுள்ளது. சங்கக் கிளைகள் மூலம் இதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் வி.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதேவேளை -

வன்னிப் பிரதேசத்திலிருந்து இப்பகுதிக்கு வந்துள்ள குடும்பங்களுக்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் வழங்கியுள்ள அனுமதிக் கடிதத்தின பிரகாரம் இலவச உலர் உணவுப் பொருள்கள் சங்கத்தினால் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-135)

# அதிவேகத்தில் வாகனமோட்டும் சாரதிகளிடம் அபராதம் அறவீடு

யாழ்ப்பாணம்,ஜுன்16

அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளிடமிருந்து வீதிப் போக்குவரத்துப் பொலீஸாரால் தண்டப்பணம் அறவிடப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் யாழ்.பிரதான வீதியில் சென்ற வாகனங்களை அரியாலையில் வைத்து வீதிப் போக்குவரத்துப் பொலீஸார் திடீர் கண்காணிப்புக்கு உட்படுத்தியபோது 15 சாரதிகள் அதிவேகமாகத் தமது வாகனங்களை செலுத்தியமை கண்டு பிடிக்கப்பட்டது. அதனையடுத்து அந்தச் சாரதிகளிடமிருந்து தலா 200 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். கடந்த ஆண்டில் ஆயிரத்து 787 வீதிப் போக்குவரத்து குற்றங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் -

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் ஆயிரத்து 694 வீதிப் போக்குவரத்துக் குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

வாகன சாரதிகள் பொறுப்புணர்வோடு வாகனத்தை செலுத்தத் தவறுவதாலேயே விபத்துக்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பதாகவும் -

இதனைக் கருத்திற்கொண்டு சாரதிகள் வீதிப் போக்குவரத்து விதிகளையும் பின்பற்றுமாறும் வீதிப் போக்குவரத்து பொலீஸ் பொறுப்பதிகாரி கோரியுள்ளார்.

(ஒ-180)

# சாயி சமித்தியில் கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்16

திருநெல்வேலி, இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நடைபெற்றுவரும் சர்வமதப்பிரியன் கண்காட்சி நாளை வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோரின் வசதி கருதி கண்காட்சி நீடிக்கப்பட்டிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# கிரிக்கெட் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுன்16

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று முற்பகல 10.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டிருக்கிறார்.

(ஐ-ரி)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுன்16

யாழ். சென்ரல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் மோதுகின்றன. (ஐ-3-ரி)

★ ★ ★

வலிகாமம் உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நவாலி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் தனது 50ஆண்டு நிறைவையொட்டி கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 4மணி - இளவாலை யங்ஹென்றீஸ் வி.க. எதிர் தெல்லிப்பழை நாமகள் வி.க.

★ பி.ப. 4.45மணி - மானிப்பாய் றெட்றேஞ்சர் வி.க. எதிர் மல்லாகம் ஆர்.டி.எஸ்.வி.க. (ஐ-86-ரி)

★ ★ ★

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும 19வயதுப் பிரிவினருக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மானிப்பாய். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாடுகின்றது. (ஐ-86-ரி)

# வலி.கிழக்கு மக்களுக்கு தனியான மக்கள் வங்கி கிளை

## உரும்பிராயில் புதனன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜுன்16

வலி.கிழக்கு மக்களுக்கென தனியான மக்கள் வங்கிக் கிளை ஒன்று உரும்பிராயில் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை மக்கள் வங்கித் தலைவர் லால் நாணயக்காரவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கருமப்பீடத்தில் சாதாரண, முதலீட்டு, ஜனஜய, பராயம் அடையாதோர் சேமிப்புக் கணக்குகளும், இசுறு உதான, சிசு உதான, வனிதா வாசனா, வதியாதோர் வெளிநாட்டு நாணயம் மற்றும் நிரந்தர, நடைமுறைக் கணக்குகளும் செயற்படுத்தப்படும். அத்துடன் துரிதகதி பணமாற்றல் சேவையும் இடம்பெறவுள்ளது.

முதல்நாளன்று 15ஆயிரம் ரூபாவுக்குமேல் ஆரம்பவைப்பாகக் கொண்டு சேமிப்புக் கணக்கைத் தொடங்குபவர்களுக்கு மக்கள் வங்கியின் சின்னம் பொறிக்கப்பட்ட பரிசு வழங்கப்படவுள்ளது.

இக்கிளையில் விரைவில் நகை அடகுச் சேவை மற்றும் கடன் சேவை என்பனவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# புலிகளின் குரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அணிசெய் கலைஞர்களாக...

நுண்கலைக்கல்லூரி அதிபர் மிருதங்க வித்துவான் இசைக் கலைமணி தணிகைமாறன் (கண்ணதாசன்), வயலின் வித்துவான் இசைக்கலைமணி இசைஞன்(கோபிதாஸ்), கலைமகள் பாடசாலை உப அதிபர் மிருதங்க வித்துவான் வரதராஜன், வித்துவான் சதா வேல்மாறன் உட்பட புகழ்பூத்த கலைஞர்கள் சங்கமித்து வழங்குகிறார்கள்.

★ ஊடகவியலாளரும் 'புலிகளின் குரல்' நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், படைப்பாளருமான நா.யோகேந்திரநாதனின் நெறியாள்கையில் 'ஒரே ஒரு சாவு' நாடகம் -

★ தமிழீழ மகளிர் கலை பண்பாட்டுக்கழகம் வழங்கும் புகழ்பெற்ற கலைஞர் செல்வி பேபி ஆசிரியையின் சங்கநாதம்(தமிழீழத்தின் புகழ்பெற்ற கலைஞர்கள் இணைந்து வழங்குகிறார்கள்) -

★ கேணல் கிட்டு மாமா வில்லிசைக் குழுவினர் வழங்கும் 'எங்கள் தலைவன் பிறந்தான்' எனும் வில்லிசை நிகழ்ச்சி -

அத்துடன் முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் து.ஜெயகுலராஜாவின் சிறப்புரை -

ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ஐ)







ஜேர்மனி வீரர் ஒலிவர் காற்றில் எம்பி எழுந்து தன் மார்பினால் பந்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகிறார். கீழே பரகுவே வீரர் ஜூலியோ சீஸர்.

# இங்கிலாந்து, ஜேர்மனி கால் இறுதிக்குத் தகுதி

சியோல்,ஜுன்16

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் நேற்று ஆரம்பமாகின. இங்கிலாந்து, ஜேர்மனி அணிகள் வெற்றிபெற்று கால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றன. பரகுவே, டென்மார்க் என்பன தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறின.

முதல் ஆட்டம் இலங்கை நேரப்படி 12.30 மணிக்கு கொரியாவின் ஜிஒன்சு மைதானத்தில் இடம்பெற்றது. ஜேர்மனியை எதிர்த்து பரகுவே மோதியது. 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வெற்றி பெற்றது.

இரண்டாம் சுற்றின் ஆரம்ப ஆட்டமான இது, உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெரு விருந்தாக இருந்தது. இரு அணிகளும் சமபலத்துடன் விளையாடின. எந்த ஒரு நிலையிலும் எந்த ஓர் அணியும் ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. அந்தளவுக்கு இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் ஆடின. மிக நீண்ட நேரம் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்கவில்லை. முன்பாதி ஆட்டம் நிறைவடைந்தபோது இரு அணிகளும் கோல் எதனையும் அடித்திருக்கவில்லை. பின்பாதி ஆட்டம் ஆரம்பித்து 40 நிமிடங்கள் சென்ற பின்பும் கூட எந்த ஓர் அணியும் கோல் அடிக்காத நிலையே தொடர்ந்தது. ஆனால் ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் ஒலிவர் நியூவிலியின் பலமான உதை அந்த அணிக்கு ஒரு கோலைப் பெற்றுத் தந்தது. தொடர்ந்து கூடுதல் நேரமாக சில நிமிடங்கள் கொடுக்கப்பட்டன.

இந்த நேரத்தில் ஒரு கோலையாவது அடித்து தோல்வியிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள பரகுவே வீரர்கள் கடும் முயற்சி செய்தனர். இந்த முயற்சியில், ஆட்டத்தின் 91ஆவது நிமிடத்தில், பரகுவே வீரர் ரொபாட்டோ அக்குனாவுக்கும் ஜேர்மனிய வீரர் மைக்கல் பல்லாக்குக்கும் இடையில் நடந்த பலப்பரீட்சையில் ரொபாட்டோ முறைகோடாக நடந்து கொண்டார் என்பதற்காக நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனி வென்றது.

இரண்டாவது ஆட்டம் மாலை 5.30 மணிக்கு ஜப்பானின் நிகிடா மைதானத்தில் இடம்பெற்றது. இங்கிலாந்து அணியும் டென்மார்க் அணியும் மோதின. 3-0 என்ற கோல் அடிப்படையில் இங்கிலாந்து அணி இலகுவாக வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணியின் மூன்று கோல்களும் முன்பாதி ஆட்டத்திலேயே பெறப்பட்டன. ஆட்டம் ஆரம்பித்த 5ஆவது நிமிடத்திலேயே இங்கிலாந்து வீரர் பேர்டினண்ட் தலையால் மோதிய பந்தை டென்மார்க் கோல் காப்பாளர் தோமஸ் ஸ்கோரின்ஸன் பாய்ந்து தட்டினார். எனினும் அந்தப் பந்து அவரது கோல் கம்பங்களிடையேயே புகுந்து கோலானது.

ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் மைக்கல் ஓவன் ஒரு கோலை அடித்தார். இது அணியின் இரண்டாவது கோலாகவும், 2002 உலகக் கிண்ணப் போட்டி ஆட்டங்களில் ஒவன் அடித்த முதலாவது கோலாகவும் இருந்தது. மீண்டும் 44ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் எமிலி ஹெஸ்கி ஒரு கோலை அடித்து கோல் எண்ணிக்கையை மூன்றாக்கினார்.

முன்னதாக டென்மார்க் அணியின் அனுபவம்மிக்க வலது பின்கள வீரர் தோமஸ் ஹெல்வக் காயம் காரணமாக ஆட்டத்திலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டமை அந்த அணிக்கு பெரும் பலவீனமானது. இறுதியில் 3-0 என்ற கோல் அடிப்படையில் இங்கிலாந்து அணி பெரு வெற்றி பெற்றது. (ம)



டென்மார்க் கோல் காப்பாளரைத் தாண்டி பந்து கம்பங்களுக்குள் செல்கிறது.

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜுன்16

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ சுவீடன் எதிர் செனகல் (ஜப்பான் - பகல் 12.30)

★ ஸ்பெயின் எதிர் அயர்லாந்து (கொரியா- மாலை 5.30). (ம)

### ராஜதந்திரி வெளியேற்ற விவகாரம்:

# அமெரிக்க - ஈராக் பிணக்கில்

# ஐ.நா. சபை சிக்கித் தவிப்பு!

நியூயோர்க்,ஜூன்16

அமெரிக்காவுக்கும் ஈராக்குக்கும் இடையேயான ராஜதந்திர பிணக்கில் ஐ.நா.சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா.தலைமையகத்தில் ஐ.நாவுக்கான ஈராக்கிய பிரதிநிதியாகப் பணியாற்றும் அதிகாரியை நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. அவர் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

நியூயோர்க்கின் கிழக்குப் பகுதியில் தங்கியிருந்த ஐ.நாவுக்கான ஈராக்கியப் பிரதிநிதியிடம், நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரும் அமெரிக்க அரசின் சிறுகுறிப்பு அடங்கிய கடிதம் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக அரங்கில்

குறிப்பிட்ட ஈராக்கிய ராஜதந்திரி அவரது ராஜதந்திர தரத்துக்கு ஒவ்வாத வேறு பணிகளில் ஈடுபட்டதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மாத இறுதிக்குள் ஈராக்கிய ராஜதந்திரி அமெரிக்காவை விட்டு வெளியேறிவிடுவார் என்று எதிர்பார்ப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கை ஈராக்குடனான அதன் முறுகல் உறவை புதிதாகப் பாதித்துவிடப்போவதில்லை என்றபோதிலும், தற்போது மிக மோசமாக உள்ள அமெரிக்க - ஈராக்கிய பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், ஐ.நாவுக்கான ஈராக்கிய பிரதிநிதியை நாட்டை வெளியேற்றும் உத்தரவை அமெரிக்க அரசு நேரடியாக அந்த பிரதிநிதியிடம் வழங்கியிருப்பது ஐ.நாவை தர்மசங்கடத்துக்கு ஆளாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கிய பிரதிநிதி மீதான குற்றச்சாட்டை ஐ.நாவிடம் தெரிவித்து, அதன் மூலமாக அடுத்தகட்ட நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்வதை விடுத்து, எதேச்சதிகாரமாக நடவடிக்கை எடுத்திருப்பது ஐ.நாவை உதாசீனப்படுத்தும் செயல என்று கருதப்படுகிறது.

இதேசமயம், அமெரிக்காவின் நடவடிக்கையினால் ஆத்திரமடைந்துள்ள ஈராக் அதிபர் சதாம் ஹூசைன், அமெரிக்க நடவடிக்கையை தடுக்காததற்காக ஐ.நா. மீது குற்றஞ்சாட்ட முனைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)



அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த புதன்கிழமையன்று கியூபாவின் தலைநகர் ஹவானாவில் பத்து லட்சம் பேர் கலந்துகொண்ட பேரணியை படத்தில் காணலாம்.

### நிலநடுக்கம்

டோக்கியோ,ஜூன்16

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலையில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆனால் பெரும் உயிர் உடைமைச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.2 புள்ளியாகப் பதிவாகியிருந்தது. 30 வினாடிகள் நீடித்தது.

# பேரழிவாயுதங்கள் தீவிரவாதிகளிடம் சென்று சேர்வதைத் தடுக்க முடிவு

## 'ஜி-8' நாடுகள் கூட்டத்தில் தீர்மானம்

ஒட்டாவா,ஜூன்16

பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கைகளுக்குக் கிடைக்காமல் இருப்பதை உறுதி செய்வது என்று தொழில் வள நாடுகளான 'ஜி-8' நாடுகள் உறுதிபூண்டுள்ளன.

கனடாவின் விஷ்லர் நகரில் இந்த 'ஜி-8' நாடுகளின் கூட்டம் இடம்பெற்றது. இந்த நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிலேயே மேற்படி விடயம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இத்தகவலை மாநாட்டின் தலைவரும் கனடா வெளியுறவுத்துறை அமைச்சருமான பில் கிரஹாம் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளின் கைகளில் பயங்கர ஆயுதங்கள் கிடைக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக முனைப்புடன் செயற்படுவதற்கு 'ஜி-8' நாடுகள் முடிவு செய்துள்ளன - என்றார் கிரஹாம்.

பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் இரசாயனங்கள், உயிரியல் மற்றும் கதிரியக்கப் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்கவும் 'ஜி-8' நாடுகள் உறுதிபூண்டுள்ளன. (பு)

# பாலியல் குற்றங்களில் ஈடுபடும் மதகுருமார் மீது கடும் நடவடிக்கை

## அமெ. ஆயர்கள் மாநாட்டில் முடிவு

பாலியல் ரீதியான குற்றங்களில் ஈடுபடும் மதகுருமார்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தல்லாஸ் நகரில் கடந்த வெள்ளியன்று நடந்த கத்தோலிக்க ஆயர்களின் கூடத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேவாலயங்கள் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கைகள் அண்மைக்காலமாக மதகுருமார்கள் மீது தெரிவிக்கப்படும் பாலியல் குற்றச்சாட்டுகளால் தவிடு பொடியாகியுள்ளதாக மாநாட்டில் பெரும் ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கத்தோலிக்க மத குரு பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒருவரால் தான் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தை அலாஸ்கா மாநிலத்தைச் சேர்ந்த பவுலா கோன் சேல்ஸ் ரோர்பசர் என்ற பெண் தெரிவித்தார். (ம)



ஆயர்கள் மாநாடு நடைபெற்ற போது....

# தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கி அல்ஜீரியாவில் 11 பேர் உயிரிழப்பு!

ஸயர்,ஜூன்16

அல்ஜீரியாவில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் ஆயுததாரிகள் சிலர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் இரண்டு சிறுவர்கள் உட்பட 11 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தலைநகரில் இருந்து தென்மேற்காக 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சுலும் என்ற கிராமத்தில் இந்தக் கொடுரம் கடந்த வியாழன்று இடம்பெற்றது.

ஆயுதம் தரித்த ஒரு குழு திடீரென கிராமத்துக்குள் புகுந்து இரு வேறு இடங்களில் திடீர் தாக்குதல்களை நடத்தியது என்று சம்பவத்தில் உயர்பிழைத்த சிலர் தெரிவித்தனர்.



உறவினர்கள் கதறல்....

முதலாவது தாக்குதலில் மூன்று அல்லது நான்கு வயதுக் குழந்தைகள் இரண்டு சுட்டுக் கொல்லப்பட்டதைத் தாம் கண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற 90 நிமிடங்களில் இரண்டாவது தாக்குதல் இடம்பெற்றது. இதில் 6 பேர் பலியாகினார்கள். மேலும் இருவர் காயமடைந்தனர்.

அல்ஜீரியாவில் இஸ்லாமிய நாடு கோரிப் போராடி வரும் இஸ்லாமியத் தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றத்.

இந்த இரு தாக்குதல்களிலும் குறைந்தது 45 பேர் காயமடைந்திருக்கலாம் என்று உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை டஜிலிடா என்ற கிராமத்தில் பஸ் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் பலஸ்தீன அதிகாரிகளுடன் பேச்சு

ஜெருசலேம்,ஜூன்16

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களிடையே மீண்டும் உயர்மட்டத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தான் பலஸ்தீன உயரதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாக இஸ்ரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஷிமோன் பெரஸ ஏற்றுக்கொண்டார். ஆனால் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தைச் சந்தித்துத் தான் பேசவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

"இரு தரப்புக்களிடையேயும் முதலில் தொடர்புகளை ஏற்படுத்துவதே எமது நோக்கமாக இருந்தது. வேறு எந்த விவரங்களும் பேசப்படவில்லை. இது வெறும் ஆரம்பம்தான்" - என்றார் ஷிமோன் பெரஸ்.

எனினும் ஷிமோன் பெரஸ் வெகு விரைவில் பலஸ்தீனத் தலைவரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று கூறப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்களிடையே நேரடித் தொடர்புகள் முடக்கப்பட்டிருந்தன. தற்போதே அவை மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய முயற்சி இரு நாடுகளிடையேயும் நீண்டகாலமாகத் தொடரும் பிணக்கைத் தீர்க்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# பலஸ்தீன ஜெனின் நகரில் நேற்று ஊரடங்கு உத்தரவு

## இஸ்ரேலிய இராணுவம் பிறப்பித்தது

ஜெருசலேம்,ஜூன்16

பலஸ்தீன நகரான ஜெனினில் இஸ்ரேலிய இராணுவம் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்துள்ளது. சந்தேகத்துக்கு இடமானவர்களைக் கைது செய்யும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டாங்கிகள், கவசவாகனங்கள், ஜீப்புகள் ஆகியவற்றில் பெருமளவான இஸ்ரேலியத் துருப்பினர் நகருக்குள் நுழைந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியப் படைகள் நகருக்குள் நுழைந்தபோது அங்கு துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றதாகவும் இஸ்ரேலிய ஹெலிகள் அங்கு குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20 மாதங்களில் ஜெனினிலிருந்து வந்த 20 தற்கொலையாளிகள் இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர் என்றும்-

அதனாலேயே அங்கு தற்போதைய தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றும் -

இஸ்ரேலிய படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம)

### பாக். அமைச்சர் பதவி விலகினார்

பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர் அப்துல் சத்தார் பதவி விலகியுள்ளார். உடல் நலத்தை காரணம் காட்டி சத்தார் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது பதவி விலகல் கடிதத்தை அதிபர் பர்வேஷ் முஷாரப்பிடம் கொடுத்திருந்தார்.

ஆனால், அதை அப்போது ஏற்க மறுத்த முஷாரப் நேற்றுமுன்தினம் சத்தாரின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். சத்தாரின் பதவி விலகல் அதிபர் முஷாரப்புக்கு ஒரு இழப்பாகும் என்று கூறப்பட்டது. (ஒ)

# கராச்சி குண்டுவெடிப்பு; எவ்.பி.ஐ. விசாரணை

இஸ்லாமாபாத்,ஜூன்16

பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பாக அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவு (எவ்பி.ஐ.) அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கென 20 எவ்பி.ஐ. அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு வந்துள்ளனர். இவர்கள் பாகிஸ்தானியப் பொலீஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை சில சந்தேக நபர்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

அதிகம் அறியப்படாத அல்குவானூன் (புனிதச்சட்டம் என்ற கருத்துடையது) என்ற குழு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்றுள்ளது. இது தொடர்பான கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை அந்த அமைப்பு கராச்சியில் உள்ள தகவல் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. (ம)

# உடன் தேவை

திருகோணமலையில் பணியாற்ற மெஷின் மைன்டர்கள் உடன் தேவை. தங்குமிட வசதி அளிக்கப்படும். சம்பளம பேசித் தீர்க்கலாம். நேரில்வரவும்.

**மனித வள அலுவலர்,**
**உதயன் பணிமனை,**
(C-22533) **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# முதலாவது பிறந்ததின வாழ்த்து

HAPPY BIRTHDAY



## ஷாத்வீகா (Shathveekaa)

**16.06.2002**

யாழ்.இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த
**இராஜேஸ்கண்ணன் - சுனிதா தம்பதியினரின்**

செல்வப் புதல்வி **ஷாத்வீகா** (4807)

தனது முதலாவது பிறந்தினத்தை இன்று (16.06.2002)ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தாமார், அம்மம்மாமார், பூட்டன், அப்பம்மா குடும்பத்தினர், பெரியப்பா, பெரியன்ரா, மாமாமார், அன்ராமார், அண்ணா, அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் என்றும் இறையாசியுடன் சகல நலன்களும் பெற்றுப் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சுகமாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

தகவல்:
தெ.சுகுமார் *(யாழ். பல்கலை.)*.

# கண்ணீர் அஞ்சலி



## தம்பிராசா செந்தில்ராசா

*(வடமாகாண தெங்குபனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் நிர்வாக சபை உறுப்பினர்)*

அவர்கள் காலமாகியதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எம்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.

(C-22535)

# மரண அறிவித்தல்

## க.தளையசிங்கம்

*(RETIRED EXECUTIVE OFFICER, BROWNS GROUP)*

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட க.தளையசிங்கம் கடந்த 11.06.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் புஸ்பத்தின் அன்புக்கணவரும் தனபாலசிங்கம் (U.K), லலிதா (U.K), ஸ்ரீனிவாசன் (ஆஸ்திரேலியா), நிர்மலா (ஆஸ்திரேலியா), இராஜமன்னன் (U.K), இராஜேஸ்வரன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதரா (U.K), கனகசபாபதி (U.K), பத்மினி (ஆஸ்திரேலியா), கலாதரன் (ஆஸ்திரேலியா), பிரேமிளா (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும் காயத்திரி, ஜனனி, பாமளா, மீனா, செந்தூரன், மனோஜ், விவேக், சிவவிரதன், விசர்தன், சங்கர், றோஷினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை பொறளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00மணிக்கு கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஉற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30,றிஜ்வே பிளேஸ்,*
*பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.*
தொலைபேசி இல.: 01-506030

(4888)

தகவல்:
குடும்பத்தினர்.

# தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கைதடி

## கிளைக்குழுத் தெரிவுக்கான

# அறிவித்தல்

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 17.02.1997ஆம் திகதி 963/1ஆம் இலக்கம கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்மூலம் எனமீது பாரக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்டு மேற்படி சங்கத்தின் துணைவிதி 23இன் ஏற்பாட்டின்படி வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 19.05.1998ஆம் தேதிய 1928/6ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் "வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான விதிகள்" இன் ஏற்பாடுகளுக்கமைய தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கிளைகளுக்குமான கிளைக் குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச் சபைக கூட்டங்களை நடத்துவதற்காக மேற்படி விதிகளின் பிரிவு 6இன்படி அக்கூட்டங்கள் நடைபெறுவதற்கான கால அட்டவணை பின்வருமாறு என்னால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி விதியின் பிரிவு 7இன்படி அக்கூட்டங்களை அழைப்பதற்கும், அதன் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும், பின்வரும் அலுவலர்களுக்கு அதிகாரமளித்து நியமித்துள்ளேன் என்பதையும் இத்தால் அறிவிக்கின்றேன்.

தவிசாளராக என்னால் பெயர் குறித்துரைக்கப்பட்ட அலுவலரினால் கிளைப் பொதுச்சபைக் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கும் உரிமைபெற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அறிவித்தல் வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இடப்பெயர்வு காரணமாக அறிவித்தல் கிடைக்காதுபோகும் உறுப்பினர்கள் இந்த அறிவித்தலைத் தங்களுக்குத் தனித்தனியாக வழங்கப்பட்ட அறிவித்தலாக ஏற்றுக்கொண்டு, குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

உறுப்பினராகச் சேர்ந்த திகதயிலிருந்து ஓராண்டு காலத்தைக் கடந்தவரும், ஒரு பங்கின் முழுப்பெறுமதி ரூபா 100/=இனைச் செலுத்தி முடித்தவருமான உறுப்பினர் ஒருவரே கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கிளைப் பொதுக்கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கும் உரிமை பெற்ற உறுப்பினராகக் கருதப்படுவர்.

### கிளைக்குழு தெரிவு தொடர்பான முக்கிய விதிகள்

- கிளை பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் - கூட்டத்துக்குச் சமுகளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நாலிலொரு (1/4) பங்கினர் அல்லது இருபத்தைந்து (25) பேர் இதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவுக்கு ஒன்பது (9) உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்படி கிளைப் பொதுச்சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக் குறைந்தது இருவர் (2) 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது (9) பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்புமூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளர்களுக்கு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாய்ப்புகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டுமூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலருக்கும் எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

### கிளைக் குழு உறுப்பினராகத் தெரிவுசெய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்.
03. உடன் முன்சென்ற 3 ஆண்டுகளுள் தீய ஒழுக்கச் செயலுக்காக குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர். அல்லது 3 மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவர் எனப் பிரகடனம் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06 இச்சங்கத்தில் வியாபாரியெனப் பதிவுசெய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடத்துபவர்.
07. சங்கத்தில் ஆதாயங்கருதி ஏதாவது ஒரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினாற் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வனவிலோ அல்லது சங்கத்தின் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல் வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையை கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. நாடாளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.
12. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100/= ஐப் பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.
13. இயக்குநர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையீடு இயக்குநர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு 6(2)இன் கீழ் ஆணையாளரால் மீளாய்வுமூலம் அல்லது இவ்விதியின் 2:4 அல்லது 2:6 இன் கீழ் அல்லது வாக்காளர் அட்டவணையிற் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.

**(சங்கத்தின் துணைவிதிப் பிரிவு இல.22(1))**

**கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்யும் கிளைப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் (23.06.2002) ஞாயிற்றுக்கிழமை பின்வரும் இடங்களில் மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

| தொ.இ. | கிளை இல. பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|
| 01 | 01 கைதடி வடக்கு | குருசாமி வித்தியாசாலை, கைதடி வடக்கு | திரு.க.குகதாசன் |
| 02 | 02 கைதடி மத்தி | சேதுகாவலர் வித்தியாசாலை, கைதடி மத்தி | திரு.ஆ.நாகலிங்கம் |
| 03 | 03 கைதடி மேற்கு | முத்துகுமாரசாமி மகா வித்தியாலயம் கைதடி மேற்கு | திரு.வை.கைலைநாதன் |
| 04 | 04 கைதடி தெற்கு | விக்கினேஸ்வரா வித்தியாசாலை, கைதடி கிழக்கு | திரு.க.சின்னராசா |
| 05 | 05 நாவற்குழி | நாவற்குழி மகா வித்தியாலயம், நாவற்குழி | திரு.எஸ்.செல்வரட்ணம் |
| 06 | 06 கோயிலாக்கண்டி | நாவற்குழி மகா வித்தியாலயம், நாவற்குழி | திருமதி செ.அழகேந்திரராசா |
| 07 | 07 கைதடி, நாவற்குழி | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை | திரு.பி.ஸ்ரீகுமார் |
| 08 | 08 மறவன்புலோ | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை | திருமதி க.இந்திராணி |
| 09 | 09 தனங்களப்பு | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை | திரு.கே.அருந்தவநாதன் |
| 10 | 10 கைதடி, நாவற்குழி தெற்கு | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை | திரு.ரீ.என்.ராஜா |
| 11 | 11 கோயிலாக்கண்டி மத்தி | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை | திரு.செ.செந்தூரன். |

**செ.கனகசபாபதி**
*கூ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம்.*

(சி-22540)

உதயன்

## தளர்த்தப்பட்ட மீன்பிடிக் கட்டுப்பாடுகள்

போராட்டம் நடத்தினால்தான் இந்த நாட்டில் உரிமைகளை ஓரளவிலேனும் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

கொடுக்கவேண்டியதைக் கேளாமலோ, போராட்டம் நடத்தாமலோ கொடுக்கும் மனப்பக்குவம் இங்கே எந்த அரசுக்கும் இதுவரை வரவில்லை.

ஆட்சி அதிகாரப் பங்கீட்டுக்கான சமாதான முயற்சிகள்கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் உக்கிரமான ஆயுதப் போராட்டத்தின் பின்னர் தான் முகிழ்ந்தன.

அதேபோல, குடாநாட்டு மீனவர்கள் யாழ்.செயலகத்தின்முன் மறியற்போராட்டம் நடத்திச் செயலகத்தை இயங்கவிடாமல் செய்தபின்னர் தான் மீன்பிடிக் கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் தளர்த்தப்பட்டுள்ளன.

இப்போதுள்ள நிலைமை முன்னர் இருந்ததை விட நிச்சயமாக முன்னேற்றமானது. முன்னர் எல்லாம் மீன்பிடிப்பதற்கு நேரக்கட்டுப்பாடு, தூரக் கட்டுப்பாடு, உடைக்கட்டுப்பாடு முதலானவை இருந்தன. மீன்பிடிக்கக் கடலில் இறங்குபவர் உடல் பரிசோதனைக்கு உட்படவேண்டியிருந்தது.

விசேட அடையாள அட்டை பெறாமல் எவரும் மீன்பிடிக்கச் செல்லமுடியாது.

இப்போது இந்தத் தொந்தரவுகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டன.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவின் ஏற்பாட்டில் பாதுகாப்பு அமைச்சில் யாழ்.அரசாங்க அதிபர், படைத்தலைவர்கள், வடபகுதி மீன்பிடியாளர்கள் சங்கங்களின் சமாசத் தலைவர் ஆகியோருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூடிப் பேசிவிட்டுச் சில முடிவுகளை அறிவித்தார்.

அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி இனிமேல் இரவிலும் பகலிலும் எந்த நேரத்திலும் மீன்பிடிக்கலாம். ஆழ்கடலுக்குச் சென்றும் மீன்பிடிக்கலாம்.

ஆக, பாதுகாப்புப் படையினரின் கடலோர முகாம்கள் உள்ள பகுதிகளில் முகாமுக்கு இடதுபுறமாகவும், வலதுபுறமாகவும், ஒரு கடல்மைல் தூரத்திலும், முகாமுக்கு நேரே இரு கடல்மைல் தூரத்திலும் மட்டும் மீன்பிடிக்க முடியாது. மற்றப்படி எங்கும் மீன்பிடிக்கலாம்.

இவை அனுகூலமானவை. பிரதிகூலமானவையும்' இருக்கின்றன.

மீன்பிடிக்கப் பகலில் எந்த நேரமும் கடலுக்குச் செல்லலாம். ஆனால், பொழுதுபடு முன் னர் திரும்பி வந்துவிட வேண்டும். அசாதாரண சூழ்நிலையில் பொழுதுபடு முன்னர் திரும்பிவர முடியாமல் நேரம் கடந்துவிட்டால், இரவில் கடலில் நிற்க நேர்ந்தால் மீனவர்கள் வர்ண வெளிச்சம் காட்டித் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடலுக்குள் எந்த இடத்தாலும் சென்று எந்த இடத்தாலும் திரும்பிவரமுடியாது. கற்கோவளம் முதல் பாஷையூர்வரை 48 "பொயின்ட்கள்" என்று சொல்லப்படும் துறைகள் இருக்கின்றன. அவற்றில் கண்காணிப்பு உண்டு. அவற்றினூடாகவே செல்ல வேண்டும். அவற்றினூடாகவே திரும்பிவரவும் வேண்டும்.

இவையெல்லாம் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதற்குத் தடையான கட்டுப்பாடுகள். இவற்றையும் தளர்த்தவேண்டும். கடலுக்குள் போவதற்கும் வருவதற்கும் கூடுதலான துறைகளை அமைக்க வேண்டும் என்பது மீனவர்களின் கோரிக்கை.

நாளை 17 ஆம் திகதி மீனவர்களின் நடை முறைக் கஷ்டங்களை அறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வடக்கே ஓர் அதிகாரி அனுப்பப்படுவார் என்று உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஒழுங்குகள் தொடர்பாக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இதேவேளை -

யாழ்.மாவட்டத்தில் மீனவர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணம் இந்த மாதத்துடன் நிறுத்தப்படும் என்ற அறிவிப்பு திடுதிப்பென வந்திருக்கிறது. தடைகள் தளர்த்தப்பட்டு, மீனவர்கள் கடலில் இறங்கித் தங்கள் தொழில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முயற்சிப்பதற்கு முன்பாக இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டிருப்பது மீனவர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. எனினும், தொழிற்கட்டுப்பாடுகள் முற்றாக நீங்கினால் நிவாரணத்திற்குக் கையேந்தும் நிலைமை உருவாகாது.

தற்போதைக்கு மீனவர்கள் போராட்டத்தை நிறுத்திவைத்து புதிய ஒழுங்குகளின்படி தொழில் செய்துபார்க்கத் தீர்மானித்திருக்கிறார்கள். சரிவரவில்லையானால் மீண்டும் போராட்டம் என்கிறார்கள். அதற்கு இடமளிக்காமல் அரசாங்கம் மீன்பிடிக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தி, சுதந்திரமாகக் கடற்றொழில் நடைபெற வழிசெய்யும் என்று நம்புகிறோம்.

# மாற்று ஏற்பாடு எதுவும் செய்யாது அமைச்சர்கள் வெளிநாடு பயணம்

## இங்கு அவசரப்பணிகள் முடக்கம்

கொழும்பு,ஜூன்16

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் சமயங்களில் தத்தமது அலுவலகங்களில் தாம் கவனித்த பணிகளுக்குத் தகுந்த மாற்று ஏற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளாமல் சென்றுவிடுவதால், பணிகளை தொடர்வதில் மேற்படி அலுவலகங்களில் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன என்று கூறப்படுகிறது.

கடந்த வாரமளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன ஆகியோர் உத்தியோகபூர்வமாக வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தனர்.

அதேசமயம், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தொழில்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட, வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.சந்திரசேகரன், கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, நீர்பாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, காணி அமைச்சர் ராஜித சேனரத்ன, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் சூழலியல் அமைச்சர் ருக்மன் சேனநாயக்க ஆகியோரும் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் தத்தமது அலுவலகங்களில் தகுதியான மாற்று ஒழுங்குகள் எதனையும் செய்திருக்கவில்லை என்றும் - இதனால் நிர்வாக ரீதியாகவும், கொள்கையளவிலும் தீர்மானங்களையோ, முடிவுகளையோ மேற்கொள்வதில் பெருஞ்சிரமங்கள், குழப்பங்கள் ஏற்பட்டதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவர் நாட்டில் இல்லாத காரணத்தால், சிரேஷ்ட அமைச்சரான கரு ஜெயசூரிய அந்த விடயத்தில் தலையிட்டு நிலைமையைச் சமாளித்தார் எனத் தெரியவருகிறது.

(ஒ-ரி)

## மணிக்கூண்டு கோபுரப் பகுதியில் மூடப்பட்ட வீதிகள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்16

யாழ்.மணிக்கூண்டுக் கோபுரப் பகுதியில் உள்ள காந்தி வீதி, வேம்படி வீதி ஆகியன நாளை திங்கட்கிழமை தொடக்கம் வாகனங்கள் தவிர்ந்த மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவுள்ளதாக யாழ்.பொலீஸ் போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

யாழ்பாணப் பொலீஸ் நிலையம் இந்தப் பகுதியில் அமைந்துள்ளதால் இதுவரைகாலமும் இந்த வீதிகள் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருந்தன.

இதேவேளை -

மணிக்கூண்டுக் கோபுரச் சந்தியூடாக யாழ்.பொது நூலகம் செல்லும் வீதியும் விரைவில் திறந்துவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

### உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து

# 'கிரீஸ்' கடத்தி விற்ற குற்றச்சாட்டில் 5பொலீஸார் உட்பட 7பேர் கைது!

வலி.வடக்கு,ஜூன்16

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதியிலிருந்து அரசுக்குச் சொந்தமான 5 பரல்கள் உராய்வுநீக்கியை (கிறீஸ்) திருட்டுத் தனமாகக் கடத்திச்சென்று விற்றதாகப் பொலீஸ் அதிகாரி உட்பட 7 பேரைச் சுன்னாகம் பொலீஸார் கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த 'கிறீஸ்' திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஓர் அதிகாரி உட்பட 5 பொலீஸாரும், எரிபொருள் விற்பனை நிலையமொன்றின் உரிமையாளர் உட்பட இரு பொதுமகன்களையும் சுன்னாகம் பொலீஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

அந்தச் சமயத்தில், தமது உடல்நிலை பாதிப்புற்று இருப்பதாக பொலீஸ் அதிகாரியும், பொதுமகன்களில் ஒருவரும் நீதிவான் பா.சுப்பிரமணியத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து, அந்த இரு சந்தேக நபர்களையும், தலா பத்தாயிரம் ரூபா காசுப்பிணை மற்றும் யாழ்.மாவட்டதைச் சேர்ந்த இரு அரச ஊழியர்களின் ஆள்பிணை ஆகியவற்றின் பேரில் பிணையில் விடப்பட்டனர். அத்துடன் யாழ்.மாவட்டத்தை விட்டு அவர்கள் இருவரும் வெளியேறக்கூடாது என்றும் நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய சந்தேக நபர்கள் ஐவரையும் நாளை 17 ஆம் திகதிவரை தடுப்புக்காவலில் வைக்கும்படியும் நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

(ஒ-86)

## தொலைக்கல்வித் திட்டத்தின் கீழ் அரச அலுவலர்க்கு கணனிப் பயிற்சி

நவாலி,ஜூன்16

அரச அலுவலர்களுக்கான தொலைக்கல்வி கருத்திட்டத்தினால் கொழும்பு தர்மபால மாவத்தையில் அமைந்துள்ள ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நிலையத்தில் கணனிப் பயிற்சி நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை தொலைக்கல்வி அலுவலகத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட கைநூல்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனத்தினால் அரச அலுவலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக 'இன்ரநெற்' பயன்படுத்தல், மின் அஞ்சல (ஈமெயில்) அனுப்புதல் அல்லது கணனி கட்டளைத் தொடர்களை அமைத்தல் ஆகியவற்றிலும் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

அரச அலுவலர்கள் தினமும் மு.ப. 7.30 மணிதொடக்கம் பி.ப. 9 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் இககணனி வசதிகளை உபயோகித்துக்கொள்ளலாம்.

தொடர்ந்து மூன்று நாள்கள் அல்லது வாரத்தில் ஒரு நாள வீதம் மூன்று வார காலத்தில் இந்தக் கணனிப் பயிற்சியை பெற்றுக்கொள்ளமுடியும்.

பயிற்சியின் முடிவில் பயிலுநர்கள் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவதுடன் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

இப்பயிற்சியைக் கற்பதற்கு அல்லது 'இன்ரநெற்' வசதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அரச ஊழியர்கள் தமது திணைககளத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை தொலைக்கல்வி கருத்திட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்ற விண்ணப்பதாரர்கள் பாடநெறியைக் கற்கக்கூடியதாக நிறுவனத் தலைவர்கள், அவர்களுக்கு கடமை லீவு வழங்கவேண்டும்.

இது சம்பந்தமான சுற்று நிருபமொன்றை அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.(ஒ-100)

**நாளை**

ஆனி 3
திங்கட்கிழமை
(17.06.2002)
திதி : ஸப்தமி
முன்னிரவு 7.16 வரை.
நட்சத்திரம்: பூரம்
முன்னிரவு 8.03 வரை.
சுபநேரம் : 11.53 - 1.23
ராகுகாலம் : 7.23 - 8.53
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

எவன் தன்னைத் தான் வீரன் என்கிறானோ, அவனே உலகின் முதற் கோழை.

### மாணவி கடத்தல் விவகாரம்:

## அதிரடிப்படை வீரர் ஒருவரும் மருத்துவ மாணவனும் கைது!

### 24லட்சம் ரூபா கப்பப் பணமும் மீட்பு!

கொழும்பு,ஜூன்16

கொழும்பு, கொல்கொடப் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரைக் கடத்திக் கப்பம்பெற்ற சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் அதிரடிப்படையைச் சேர்ந்தவரும் மருத்துவபீட மாணவனும் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் தமது குற்றத்தினை ஒப்புக்கொண்டுள்ளதுடன் மாணவியின் பெற்றோரிடம் பெற்ற கப்பப்பணமான 24 லட்சம் ரூபாவையும் பொலீஸாரிடம் கையளித்துள்ளனர்.

மாணவியின் பெற்றோர் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலீஸார் சந்தேக நபர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தவர் என்றும் - மற்றவர் ஆயுர்வேத வைத்திய பீடமாணவன் என்றும் - விசாரணையின் மூலம் தெரியவந்ததாகக் கூறப்படுகிறது.

(ஒ-12)

## பாதுகாப்பு ஊழியர்களை தாக்கும் சம்பவங்கள்!

யாழ்ப்பாணம்,ஜூன்16

நாச்சிமார் கோவில் அருகே உள்ள அரசடிச் சந்திப் பகுதியில் இரவுநேரப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நல்லூர் வணிகர் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் முகம் முற்றாக மூடப்பட்ட கறுப்புநிற தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிந்த மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த 13ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு 12மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கறுப்புநிற தலைக்கவசம் அணிந்து இலக்கத்தகடு பொருத்தப்பட்ட மோட்டார்சைக்கிளில் வந்த நபர் ஒருவரே திடீரெனப் பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கியுள்ளார். பாதுகாப்பு உத்தியோகத்தரும் அந்த நபர்மீது திருப்பித் தாக்கியதை அடுத்து அப்பகுதியில் மறைந்திருந்த வேறு நால்வர் அவ்விடத்தில் வந்தனர். பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவாறு அவர்களின் பிடியில் இருந்து தப்பித்துக்கொண்டார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி நள்ளிரவு இதே பாணியில் மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று நல்லூர் வணிகர் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கிவிட்டுத் தலைமறைவாகியது. திருட்டுக்களில் ஈடுபடும் கும்பல்களே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-180)

# எல்லா சீற்றாலும்

# கூரை போட முடியாது தானே...



## இலங்கையில் முதற் தரமான...

# யானை மஸ்கனைட்

கூரை, சீலிங்கிற்கான தகடுகள்

விநியோகத்தர்கள்:
**வரையறுக்கப்பட்ட மஸ்கன்ஸ்**
175 ஸ்ரீ சுமணதிஸ்ஸ மாவத்தை,
கொழும்பு 12.
தொலைபேசி: 325561-3

விநியோகத்தர்கள்:
**வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்**
541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 12.
தொலைபேசி: 326701/ 5, 324913
மற்றும் நாடளாவிய கிளைகள்

*உறுதியின் மறுவடிவம்*

# துணிவு, பணிவு, தன்னடக்கம் இவையே 'கராட்டி' தரும் பண்புகள்

உலகநாடுகள் முழுவதும் ஆண்களும், பெண்களும் விரும்பிக் கற்கும் ஒரு யுத்தக் கலையாக இன்று 'கராட்டி' வளர்ச்சியடைந்துள்ளது. இது ஒரு தற்பாதுகாப்புக் கலையாகும. தற்போது சில இடங்களில் ஆயுத பாவனைகள் புகுத்தப்பட்டாலும் 'கராட்டி' என்ற சொல்லில் அர்த்தம் 'வெற்றுக்கை' என்பதையே குறிக்கின்றது.

இன்று நம் நாட்டிலும் இக்கலையானது பிரபல்யம் அடைந்து வருகின்றது. இருந்தாலும் இககலையின் நோக்கங்களும் அடிப்படைக் கருத்தில் உள்ள புனிதத் தன்மைகளும் புறந்தள்ளப்பட்டு 'இதுவொரு அடிபாட்டுக் கலை' என்ற அர்த்தத்தில் மட்டுமே நம்மவர்கள் பலர் கையாள்வது வேதனைக்குரியது மட்டுமல்ல, அறியாமையுமாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவிலுள்ள ஷலோலின் என்ற கோயிலிலுள்ள (The Shaolin Monastrey) ஷென் (Zen) புத்தமதத் துறவிகளால் தமது சமய மாணவர்களின் கடும் ஒழுக்கக்கட்டுப்பாட்டிற்காக, சகிப்புத் தன்மையும், ஆன்மீக உடற்பலத்தினையும் வலுப்படுத்தும் நோக்கத்தோடு ஒரு புனித கலையாக இது பயிற்றப்பட்டது.

இக்கலையானது பின் ஜப்பானின் ஒக்கினாவா (Okinawa) தீவுகளுக்குப் பரவி, அங்குள்ள ஏனைய யுத்தக் கலைகளோடு சேர்ந்து பிரபல்யம் அடைந்தது. அங்கு ஒக்கினாவா பிரபுக்களாலும், காகோஷிமா பிரபுக்களாலும் ஆயுதபாவனை முற்றாகத் தடைசெய்யப்படவே, தற்பாதுகாப்பு முறையிலும் அதிநுட்பங்கள் புகுத்தப்பட்டு, வேண்டாதவை விலக்கப்பட்டு சிறந்ததொரு தற்பாதுகாப்பு கலைக்குரிய நிலையினைப் பெற்றது.

சீனாவில் இக்கலை ஆரம்பமானது என்ற முறையில் 'சீனக்கை' (Chinese Hand) என்று இது ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. (பௌத்த மதத்தின் ஆதிமூலம் இந்தியா என்பதால் இக்கலையின் ஆரம்பம் இந்தியாதான் என்று வாதாடுவதற்கு இடமுண்டு).

இக்கலையினை பூரணமாகக் கற்றுக்கொண்ட ஒருவர் ஆயுதத்தின் துணையில்லாமல் எதிரிகளிடமிருந்து தன்னை சுலபமாகக் காப்பாற்றிக் கொள்ள இயலும் என்று தெரியப்படுகின்றது. தன் மூடிய கைகளின் பலத்தால் ஒரு பலகையை ஒரே குத்தில் உடைக்கத் தெரியவோ, பல அடுக்குகளைக் கொண்ட ஓடுகளைத் தகர்த்து விடவோ முடியும். ஒரு உதை மூலமோ, குத்தின் மூலமோ ஒரு எருதினைக் கொன்றுவிட இயலும், தன் விரிந்த கையால் அதன் விலா எலும்புகளை உடைத்தெறிய முடியும்.

தனது உடல் அவயவங்களை விரும்பியபடி வளைக்கவோ, மிக வேகமாக இயக்கவோ இயலும் விசையுரு பந்தினைப் போல் 'வேண்டியபடி செல்லும் உடல் கேட்டேன்' என்ற பாரதியின் ஆசையை அடைய முடியும். ஆனால், இந்தத் தீர செயல்கள் மட்டுந்தான் கராட்டி என எண்ணுவது பொருந்தாது. அதற்கு மேலால் கராட்டிப் பயிற்சியானது ஆன்மீக வளர்ச்சிகொண்டது. உண்மையிலேயே ஆன்மீக வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டே உடல் ரீதியான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

துணிவு, பணிவு, தன்னடக்கம் போன்ற சிறப்பான தன்மைகளைப் பேணிக்காக்கும் ஏனைய விளையாட்டுக் கலைகளின் பண்புகளில் இருந்தும், கராட்டியானது சற்றேனும் வேறுபட்டதல்ல என்பதனை அதன் அடிப்படை சாராம்சத்தினை உணர்ந்தவர்கள் அறிவார்கள். பெரும்பாலான யுத்தக் கலைகள் ஆரம்பப் பயிற்சியின்போதே மிகக் கடினமானதாக இருப்பதால் பலவீனமான தேக அமைப்பும், மனவலிமை குன்றிய நிலையில் உள்ளவர்கள், வயதானவர்கள், சிறுவர்கள் கராட்டிக் கலையினையும் கற்றுக்கொள்ள அஞ்சுவார்கள்.

ஆனால், மிக மெதுவானதும் அவர்களுக்குரிய இயல்போடும் கராட்டிப் பயிற்சியினை வளர்த்துக் கொண்டு, அதிலொரு சிறந்த தேர்ச்சியினை அடையமுடியும் என்பதனை கராட்டியில் நிபுணத்துவம் அடைந்தவர்களது வரலாறு காட்டும். ஆனால், ஒரு குறிப்பிட்ட ஆறு மாதத்திலோ ஒரு வருடத்திலோ இக்கலையில் பூரணத்துவம் அடைந்துவிட முடியும் என்பது மாபெரும் தவறாகும். அதற்கு பத்து, இருபது வருடமாகலாம். அல்லது வாழ்நாள் முழுவதும் தேவைப்படலாம்.

காலங்களின் எல்லைகள் ஒருவரின் ஆன்மீகப் பயிற்சியில் எந்தளவுக்கு இட்டுச்செல்லும் என்பது கூறமுடியாது. இக்கலையின் நுண்அறிவு நுட்பங்களின் நிபுணத்துவம், தைரியம், தன்னடக்கத்துடன் கூடிய பணிவுடன் ஒருவர் நாளாந்த செயல்களோடு இக்கலை பின்னிப் பிணைவதில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது.

'அழுக்கற்ற ஒரு தெளிவான கண்ணாடி தன்முன்னே தோன்றும் உருவத்தினை அப்படியே காட்டுவது போலவும், நிசப்தமான ஒருபெரும் பள்ளத்தாக்கு தன்னிடம் ஏற்படும் ஒரு சிறு ஒலியைக்கூட துல்லியமாக வெளிப்படுத்துவது போலவும், ஒரு கராட்டி வீரன் தெளிவான சஞ்சலமற்ற மனநிலையுடையவனாக மிகத் தூய்மையான எண்ணத்தோடு, சுயநலத்தினின்றும் தன்னை வெறுமையாக்கிக் கொள்ளவேண்டும்'.


Gichin Funakoshi

இதுவே 'கராட்டி'யில் உள்ள கரா (Kara) என்பதன் கருத்தாகும் என்று நவீன கராட்டியின் தந்தையான Funakoshi Gichin அவர்கள் கூறுகிறார்கள்.

Funakoshi Gichin அவர்கள் ஒக்கினாவா (Okinawa) ஆசிரியர் கல்லூரியில் பேராசிரியராக இருந்த போது 1922இல் ஜப்பான் கல்வியமைச்சினால் நடத்தப்பட்ட 'பாரம்பரிய யுத்தக் கலைகள் பற்றிய கண்காட்சி ஒன்றிற்கு, அதன் வரலாறுகளைப் பற்றியும் செயல்முறைகள் பற்றியும் விளக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கே, பல நூற்றுக்கணக்கான ஜப்பானிய மக்கள் முன்நிலையில் Funakoshi அவர்கள் அளித்த செயல்முறை விளக்கங்கள் பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்ததோடு ஆச்சரியப்படுத்தியது. முன்னேற்பாடின்றி திடீரென வரும் தாக்குதல்களில் இருந்து ஒரு கராட்டி வீரன் தன்னைக் காத்துக்கொள்ளும் நுட்பங்கள் அந்த மேடையில் எந்தவித ஆயத்தங்களும் இல்லாத நிலையில் செய்துகாட்டப்பட்டன.

அன்றுதான், ஜப்பான் நாடு கராட்டிக் கலையின் சிறப்பினை முதன் முதலில் தெரிந்துகொண்டது. அன்றிலிருந்து ஜப்பானிய அரசு டோக்கியோவில் பல பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் கராட்டியினைக் கற்பிக்கும்படி வேண்டியது. ஜப்பானின் சரித்திரத்தில் ஒரு மையக் கல்லாகக் கருதப்படும் 'Shotokan' என்ற கராட்டி அமைப்பொன்றை Funakoshi அவர்கள் 1936இல் ஸ்தாபித்தார். கராட்டி என்ற கலையை அம்மக்கள் அனுபவிக்கக்கூடிய நிலையை ஒரு தனி மனிதன் உருவாக்கினான் என்றால் அதன் பெருமையெல்லாம் Funakoshi அவர்களையே சாரும்.

கராட்டி என்பது சிலபோது பயங்கரமானதும், தீங்கானதும் என்று கருதப்படுகின்றது. மக்கள் அதனை ஒரு ஆபத்தான கலை என்று ஒதுக்கிவிடுகின்றார்கள். ஆனால், அதன் பெறுமதி அதனைப் பாவிப்பவர்களில் தங்கியுள்ளது. அதன் கண்மூடித்தனமான பிரயோகம் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடும். ஆகையால் மக்கள் மத்தியில் அதற்கேற்படும் அச்ச உணர்வை மறுக்க இயலாது. ஒரு நல்ல கலையைக் கற்பதால் ஆபத்துக்கள் இருக்கின்றன என்ற ஒரு காரணத்தால் மட்டும் அதனை ஒதுக்கிவிட இயலாது.

சக்திமிக்க மருந்துகள் ஆபத்தானவை. நஞ்சு பயம் ஏற்படுத்தக் கூடியன. இருந்தும் மருந்துகளைத் தடை செய்வதை ஆதரிப்பவர்கள் மருத்துவ உலகில் எவரும் இருக்க முடியாது. சக்திமிக்க மருந்துகளை அதன் பெறுபேறுகள் அவற்றைப் பாவிப்பவர்களில் தங்கியுள்ளது. சரியான முறையில் - சரியான காலத்தில் - சரியான அளவில் - அவற்றைப் பயன்படுத்துவதால் பெரும் நன்மைகள் உண்டு.

கராட்டியும் முறைகேடாகப் பயனபடுத்தும் போது அவை ஆபத்தானதாக முடியும். சக்திமிக்க மருந்துகளின் பாவனைகள் பற்றி [illegible]ளிக்கு வைத்தியர்கள் சரிவர எடுத்துக்கூறுகிறார்கள். அதேபோல் இக்கலையிலும் அதன் முறை[illegible]ன பாவனையும் விளக்கமும்தான் கராட்டி எனப்படும்.

இக்கலையினை முறையாகக் கற்றுக்கொண்ட ஒரு மாணவன் எளிதில் சண்டையிடமாட்டான். அவனது ஒரு குத்தோ, உதையோ ஒருவரது வாழ்விற்கு முடிவுகட்டக்கூடும் என்பதால் ஒரு கராட்டி வீரன் தன் வாழ்நாளில் இக்கலையின் நுடபத்தினை ஒருமுறை மட்டும் அனுபவிப்பது சாத்தியமாயிருக்கும். இல்லையேல் ஒரு முறையேனும் சந்தர்ப்பம் கிட்டாமலும் போகலாம்.

கராட்டி என்பது, விரும்பாத எல்லோரையும் எதிரியாகப் பாவித்து தாக்கியழித்து அல்லது காயப்படுத்தி விட வேண்டும் என்ற உணர்வினை அநேக ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு ஊட்டுகிறார்கள்.

கராட்டிக் கலையின் உண்மையினை சரியாக அறியாத கராட்டி ஆசிரியர்கள் இக்கலையினை வியாபார நோக்கமாகவும், சுயகௌரவத்திற்காகவும் பயன்படுத்துகின்ற அறியாமையே இக்கலையில் பல துர்நடத்தைகொண்ட மாணவர்கள் உருவாவதற்கும், இக்கலையினைப் பற்றிய மக்கள் மத்தியில் உலாவும் தப்பான எண்ணத்திற்கும் காரணமாகும்.

கராட்டியானது சீனக்கை (Chinese Hand) என்ற அர்த்தப்பட சீன இலக்கியங்களில் குறிப்பிடப்படாமையால் Karate என அழைக்கப்பட்டது. Funakoshi அவர்கள் 'Zen Buddhist Phylosoph'யில் அதனுடைய அர்த்தம் ஒரு மனிதன் தன்னையே வெறுமையாக்குவது (Rendering one self empty) என்று அர்த்தப்படுத்தினார்.

மேலும் ஒரு கராட்டி 'மூங்கில் தடி' ஒன்றுக்கு உருவகமாகக் கொள கிறார். மூங்கில் உள்ளே கோறை (Kara)யாகவும் வெளியில் முடிச்சுக் களுடன் (கட்டுப்பாடு வலிமை) வளைந்து கொடுக்கக்கூடிய இறுக்கமானதுமாக இருக்கும். அதிலுள்ள துவாரத்தில் கலைத் தெய்வத்தின் இதழ் பட இசை மீட்கத் தொடங்கும். உலகமே இன்பம் பெறும்.

**M.S.சந்திரபோஸ்**
**BLACK BELT 2nd DAN (NIDAN)**
**ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS**

கராட்டி வீரன் ஒருவனின் தன்மை இத்தகையதே.

கராட்டிக் கலையின் மாணவன் கராட்டி பயிற்சியில் தன்னை வலுப்படுத்திக்கொண்டு செல்லச்செல்ல அவனிடம் பணிவுகளும் கள்ளமற்ற - தெளிந்த - வெறுமையான - மன நிலையும் உருவாகிக்கொண்டே செல்லும். ஆனால், இன்றைய கராட்டி வீரர்கள் கொடூரபோக்கும் கொண்டவர்களாக காணப்படுகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் கராட்டியில் உடற் பயிற்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்படுதலேயாகும். ஆன்மீகப் பயிற்சிகள் அறவே தள்ளப்பட்டு விடப்படுகிறது.

இக்கலையினைப் பயின்ற மாணவன் ஒருவன் நீதியின் பக்கம் திடமான நம்பிக்கை கொண்டவனாகவும், தன்மீது அபார நம்பிக்கை கொண்டவனாகவும் சரியானது என்று கண்டவிடத்து ஆயிரம் எதிரிகளாலும் எதிர்த்து நின்று வெல்வேன் என்ற துணிவும் கொண்ட பண்பும் மதிப்புமுள்ளவனாகத் திகழவேண்டும் இதுவே இக்கலையினை புனர்நிர்மானம் செய்து நவீனமயப்படுத்திய நவீன கராட்டியின் தந்தையான Funakoshi Gichin அவர்களின் விருப்பமும், கராட்டியின் தத்துவமுமாகும்.☆

# தமிழர்களின் சமாதான ஈடுபாடு குறித்து கோபிஅனான் பாராட்டு!

கொழும்பு,ஜூன்16

இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்கள் சமாதானத்தின் மீது கொண்டுள்ள அதீத ஈடுபாட்டை தாம் வரவேற்பதாக ஐ.நா.சபை செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைக்குக் கொண்டுவருவதற்கு இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் முயற்சிகளையும் தாம் மிகவும் பாராட்டுவதாக கோபிஅனான் மேலும் கூறினார்.

அண்மையில் அமெரிக்கா சென்ற அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ நியூயோர்க்கில் கோபிஅனானைச் சந்தித்த போதே அனான் இதைத் தெரிவித்தார்.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு ஐ.நா.சபை தயாராக இருப்பதாகவும் கோபிஅனான் அப்போது தெரிவித்தார். (ஓ)

## நூல் வெளியீடு

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் "கீர்த்தனைகள் நூல் வெளியீடும், தெய்வீக இசை ஆராதனையும்" இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முத்தமிழ் குருமணி நா.சர்வேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

தெய்வீக இசை ஆராதனையை யாழ்.பல்கலைக்கழக இசை விரிவுரையாளர் ஸ்ரீ.தர்ஷனன் நிகழ்த்துவார்.

கீர்த்தனைகள் நூலிலுள்ள பாடலகள் மஹாவித்துவான் ந.வீரமணி ஐயரால் வேங்கடேச வரதராஜப் பெருமாள் மீது பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-ரி)

# வாசகர் திருமுகம்

## தமிழீழ நீதி நிர்வாக சேவை மீண்டும் யாழ்.மண்ணில் ஏற்படுமா?

தமிழீழ நீதி நிர்வாக சேவை யாழ்.மண்ணில் ஏற்படுத்தப்படுமா? கடந்த காலங்களில் யாழ்.மக்கள் பட்ட பல துன்பங்கள், துயரங்களுக்கு இதன்வாயிலாக தீர்வு கிட்டப்படுமா? லஞ்சம், ஊழல் போன்றன இன்றைய நீதி, நிர்வாகத்தில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்திய வண்ணமே இருக்கின்றது. மொழிப்பிரச்சினை இன்[illegible]ய நிர்வாகத்தில் பாரிய சிக்கலாகவுள்ளது. மேலும், அடாவடித்தனங்களும், சமூகச் சீர்கேடுகளும் வளர்ந்த வண்ணமே உள்ளன.

இளம் சமூகம் சரியான முறையில் நெறிப்படுத்தப்படவில்லை. களவு, கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகங்களும் மலிந்துவிட்டன. இன்றைய நிர்வாகத்தில் இவையாவற்றிற்கும் எந்தவிதமான தீர்வு கிட்டியது? இன்றைய காலகட்டத்தில் தமிழீழ நிர்வாக சேவையின் தேவை அதிகரித்துள்ளது. மீண்டும் இந்நீதி நிர்வாக சேவை இம்மண்ணில் உருவாக்கப்படுவதன் வாயிலாக ஒழுககமுள்ள தேசப்பற்றான ஒரு தமிழ்ச் சமூகத்தை உருவாக்கமுடியும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகும்.

*சித்தங்கேணி.* **ச.ஐங்கரன்.**

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நேரப்பதிவு இயந்திரம் தேவையே!

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேரப்பதிவு இயந்திரம்மூலம் பல்கலைக் கழகப் பணியாளரின் வரவைப் பதியும்முறை கொண்டுவரப்பட இருப்பது மிகவும் அத்தியாவசியமானதும் வரவேற்கத்தக்கதுமாகும். முதன் முதலில் யாழ்.பல்கலைக்கழகம் நேர முகாமைத்துவத்தில் முன்மாதிரியாகவும், அதனை அறிமுகப்படுத்தும் நிறுவனமாகவும் இருப்பதற்கு முன் வந்தது போற்றுதற்குரியது. குறிப்பாக எம் மத்தியில் காணப்படும் அசமந்தமான போக்கையும், சாட்டுப்போக்குக் காட்டும் தன்மையையும் மாற்றி ஓர் உண்மையான தன்மையில் வேலைகளைச் செய்யும் வழமையும் பழக்கமும் எம்மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும்.

போரினைச் சாட்டாக வைத்து நேரம் பிந்தி வருவதையும், மனச்சாட்சிக்கு மாறாக கையொப்பமிடும் வழக்கம் எமது சமூகத்தில் புரையோடிவிட்டது. ஒரு சிலர் போரினைக் காரணம் காட்டி அதனை நிராகரிக்கவும். அதற்கு சார்பாக ஊழியர் சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடமுனைவதும் கவலைக்குரிய விடயமாகும். போரினைக் காரணம் காட்டியிருந்தால், யப்பான் முன்னேறியது போன்று எம் தமிழீழத்தைக் கட்டி எழுப்பமுடியாது. இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பான் அடைந்த மிகமோசமான நிலைக்கும், இன்று அது அடைந்த முன்னேற்றத்தையும் நோக்கிப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமானதாகவிருக்கும். வேலை நிறுத்தத்தில் ஈடுபடமுனைபவர்கள் அல்லது இம்முறையினை எதிர்ப்பவர்கள் குறுகிய சுயநலம் பார்ப்பவர்கள் முதலில் யப்பான் முன்னேறிய வரலாற்றை உற்றுநோக்கவேண்டும். ஏதோ ஓர் ஊழியர் பலம் இருக்கின்றது என்ற நோக்கில் எதற்கெடுத்தாலும் நாட்டின் எதிர்க்கட்சி போல எதிர்ப்பதை வழக்கமாக கொண்ட எமது பாரம்பரியம் மாறவேண்டும்.

ஊழியர் சங்கம் இதனை எதிர்ப்பதற்கு கூறும் காரணங்களை நோக்கினால் முதலில் யுத்தத்தைக் காரணம் காட்டுகிறார்கள். அதற்கு வன்னிப் பாதை தற்போது திறந்துவிடப்பட்டுள்ளது., போய்ப்பார்த்தால் தெரியும் அங்கு நடைபெற்ற யுத்த அவலங்கள் போல இங்கு நடைபெறவில்லை என்றே கூறலாம். ஆயினும் மிகவும் திறமைமிக்க நிர்வாகம் வெளிநாட்டு பிரஜைகள், அதிகாரிகள் கூட வியந்து பாராட்டும் அளவில் இருக்கிறதென்றால் அங்கு தியாகங்கள் செறிந்து கிடக்கின்றன. உழைக்க வேண்டும். எம்மண்ணை உயர்த்த வேண்டும் என்ற வெறி அங்கு உள்ளது. இன்னும் பார்க்கப் போனால் மக்கள் உண்மையாக உழைக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவர்களாக உள்ளார்கள். அத்துடன் அங்குள்ள போக்குவரத்து வசதியைவிட இங்கு எத்தனையோ மடங்கு வசதிகள் உள்ளது. பிரயாணங்களைக் காரணங்காட்ட நியாயமில்லை.

மற்றைய காரணமாக, ஒரு பல்கலைக்கழகத்திலும் இல்லாத முறை இங்கு ஏன்? என்ற கேள்வி எழலாம். ஏன்? தமிழன், தமிழ்ப் பல்கலைக் கழகம் இம்முறையை அறிமுகப்படுத்திய பெருமையை பெறக்கூடாதா? யாரும் செய்து காட்டிய பின் செய்து பழக்கப்பட்டு போன எமக்கு இது ஓர் ஒவ்வாத செயலாகத் தோன்றலாம். சுயநல நோக்காகச் சிந்திக்காது இருக்கப் பழகவேண்டும். ஊழியர் சங்கம் இதனை எதிர்க்கின்றதென்றால் இவ்வளவு காலமும் பொய்யான நேரத்தையே கையொப்பத்தில் போட்டோம் என்பதை ஒப்புக்கொள்வது போல ஆகாதா? அதனை அவர்கள் ஒப்புக்கொள்ளகின்றார்களா? இதற்கு அவர்கள் பதில் 'ஆம்' என அமையுமாக இருந்தால் மனச்சாட்சி உடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதோடு இதற்கு மேலதிகாரிகள் என்ன ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தார்கள் என்ற கேள்வி எழலாம் அல்லது அதற்கு அவர்கள் உடந்தையானவர்கள் என்று பொருள் கொள்ளலாமா?

இறுதியாக இதனை அறிமுகப்படுத்த முனைபவர்கள் பாரபட்சம்காட்டாது எல்லோரையும் இம்முறையின்கீழ் கொண்டுவருதல் வேண்டும். அத்துடன் போதியளவு இயந்திரங்கள் கொண்டுவரப்படல் வேண்டும். இல்லையேல் அதுவே நேரப்பின்னடைவு ஏற்படுத்தும் காரணியாக அமையலாம். எவ்வாறு நோக்கியும் இம்முறை மிகவும் நன்மையையே பயக்கும் என்பது உறுதி. அதை எந்தவித அழுத்தங்களுக்கும் பயப்படாமல் அமுல்படுத்துவது சிறந்த நேர்மையான நிர்வாகத்தை எடுத்துக்காட்டும்.

*திருநெல்வேலி.* **திகழோன்.**

## சமாதானத்தின் தேவன்
## இயேசு வாழ்வு தருகிறார்
## தெய்வீக சுகமளிக்கும்
## நற்செய்திக் கூட்டங்கள்

**விடுதலையின் செய்தியும், ஜெபமும்**

சுவிசேஷகர்

## ஞானம் அம்புறோஸ்
**(Divine Love Church, Trincomalee)**

குருடர்கள் பார்வை அடைகிறார்கள், முடவர்கள் நடக்கிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள், தீராத நோய்களிலிருந்து விடுதலை அடைகிறார்கள்.... (லூக்கா 4:18)

- கண்ணீரில் இருந்து விடுதலை
- மரண இருளில் இருந்து விடுதலை
- தீராத நோயில் இருந்து விடுதலை
- பின்மாற்றத்தில் இருந்து விடுதலை
- பில்லி சூனியங்களில் இருந்து விடுதலை
- பிசாசின் கட்டுகளில் இருந்து விடுதலை
- பாவபழக்க அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை

## இயேசு தருகிறார் இன்றே தருகிறார்

இடம்: அல்பிரட் துரையப்பா ஸ்ரேடியம், யாழ்ப்பாணம்.
காலம்: 21.06.2002 முதல் 25.06.2002 வரை
நேரம்: மாலை 4.00 மணி தொடக்கம்

**சாதி, சமய, சபை பாகுபாடு இன்றி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

கொக்குவில். (4851) எஸ்.எம்.ஸ்ரீபன்
இரட்சிப்பின் சத்தம் சபை


## வருடாந்த கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்16

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தில் தாய்ச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் தோழர் பேர்ட்டி ரணவீரகே, செயலாளர் தோழர் C.ஜயதுங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-ரி)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்16

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

## சண்டிலிப்பாயில் பொதுசன உதவி கொடுப்பனவுகள்

நவாலி,ஜூன்16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற வற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பபட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-100)

## ஜூன்மாத ஓய்வூதியம்

நவாலி,ஜூன்16

மலேஷியா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் அரசுப் பணியாற்றி ஓய்வுபெற்ற யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதியங்கள் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவு அறிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் தாம் வழக்கமாக ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்ளும் வங்கியில் தமது ஓய்வூதியத்தைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-100)

### இறுதி வருட முகாமைத்துவ மாணவர்களுக்கான
## முக்கிய அறிவித்தல்

அனைத்து முகாமைத்துவ இறுதி வருட மாணவர்கள் அனைவரும் நாளை (17.06.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் குழுப்புகைப்படம் எடுப்பதற்காக உரிய ஆயத்தங்களுடன் பல்கலைக்கழக வளாகத்திற்குச் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

முகாமைத்துவ மணாவர் மன்றம்,
(4872) யாழ்.பல்கலைக்கழகம்.


## மாபெரும் சலுகை விற்பனை (2002)

காலம் : 14.06.2002 தொடக்கம் 18.06.2002 வரை.
(ஞாயிறு 10.00 தொடக்கம் 2.00 மணிவரை)

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

இடம்:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(4833)


## மரண அறிவித்தல்

### சிவானந்தம் மதிமுகன்

எழுதுமட்டுவாழ் தெற்கை நிரந்தர வதிவிடமாகவும் மருதடி, பருத்தித்துறையைத் தற்காலிக வதிவிடமாவும் கொண்ட சிவானந்தம் - நவமணி தேவி (உப அஞ்சல் அதிபர், எழுதுமட்டுவாழ்) தம்பதிகளின் அன்பு மகனும் சாம்பகியின் அன்புச் சகோதரனுமாகிய மதிமுகன் (பளை மத்திய கல்லூரி - முதலாம் ஆண்டு மாணவன்) அவர்கள் 13.06.2002 வியாழக்கிழமை இரவு கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற க.குலசேகரம்பிள்ளை மற்றும் நாகம்மா மற்றும் அ.துரைசிங்கம், சின்னம்மா தம்பதிகளின் பேரனும் சிவராஜா (கனடா), சிவரத்தினம், சிவாகரன் (கனடா), சிவரூபன் (சுவிஸ்), சுபத்திராதேவி, கெங்காதேவி ஆகியோரின் பெறாமகனும் சிவபாக்கியம், அன்னலட்சுமி, இந்திராணி, சிவராணி மற்றும் நடராஜலிங்கம், சிவயோகலிங்கம், சித்திவிநாயகலிங்கம் (அபுதாபி), திருக்குமாரலிங்கம், கிருஷ்ணானந்தலிங்கம், அருட்சோதிலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பிரதான வீதி (இ.போ.ச.டிப்போ அருகில்),*
*மருதடி, பருத்தித்துறை.* (4883)

தகவல்:
கு.சிவானந்தம் (வரன்)
*"லிங்கநேய",*
*எழுதுமட்டுவாழ் தெற்கு.*


# தரம் குறைந்த இரும்பினை வாங்கினால் வாழ்நாள் முழுதும் வருந்த நேரிடும்

நீளம் குறைந்த, பாரம் குறைந்த, சக்தியற்ற, சுற்றுவட்டம் குறைந்த, உத்தரவாதமற்ற, தரம் குறைந்த, இரும்பை வாங்கி உபயோகிக்காதீர்கள்

அசல் "ஹயட் ஸ்டீல்" இரும்புக் கம்பிகளில் HS முத்திரை இடப்பட்டிருக்கும். "ஹயட் ஸ்டீல்" இரும்பு வடக்கிலும் கிழக்கிலும் கட்டிடம் கட்டுவதற்கும் இன்னும் பல வேலைகளுக்கும் மிகவும் உகந்ததென கட்டிடத் திணைக்களத்தினால் அத்தாட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது




*இலங்கையில் உருக்கின் தரத்தை மேம்படுத்துகிறது*

## ஹயட் ஸ்டீல்ஸ் (பிரை) லிமிட்டட்

762. மருதானை வீதி. கொழும்பு 10.
தொலைபேசி: 696644, 075-367396, 075-338956-7 ..பெக்ஸ்: 696633 ஈமெயில்: tho@eureke.rialk
தொழிற்சாலை: பெலஹெல, தெகட்டன. தொலைபேசி: 571594, 571890 பெக்ஸ்: 571890
விற்பனையாளர்களுக்கும் தயாரிப்பு விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்: 071-729708

"ஹயட் ஸ்டீல்" இரும்பு
யாழ்ப்பாணத்தில்ஏக விநியோகத்தர் மற்றும் முகவர்
**ஜெசிபா ஏஜென்ஸ்**
132, ஸ்ரென்லி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்.மருத்துவமனைக்கு கண் வில்லைகள் அன்பளிப்பு!

## தெஹிவளை லயன்ஸ் கழகம் வழங்கியது

யாழ்ப்பாணம்,ஜூன்16

தெஹிவளை லயன்ஸ் கழகத்தின ரால் யாழ்.போதனா வைத்தியசா லைக்கு கண் சத்திரசிகிச்சைக்குரிய ஆயிரத்து 225 கண்ணாடி வில்லை கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த வில்லைகளை கையளிக் கும் வைபவம் அண்மையில் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

தெஹிவளை லயன்ஸ் கழகத் தைச் சேர்ந்த இரு பிரதிநிதிகள் கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசனிடம் இந்தக் கண்ணாடி வில்லைகளைக் கையளித்தனர்.

இக்கண்ணாடி வில்லைகளுக்கு இதுவரை காலமும் யாழ்.ஆஸ்பத்திரி யில் பெரும் தட்டுப்பாடு நிலவி வந் தது. கண் சத்திரசிகிச்சை செய்து கொள்ளும் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களில் இக்கண்ணாடி வில்லைகளை வாங்கவேண்டியிருந்தது.

தற்போது தெஹிவளை லயன்ஸ் கழகத்தினரால் அன்பளிப்புச் செய் யப்பட்ட இந்தக் கண்ணாடி வில்லைகள் நோயாளர்களுக்கு இலவசமாகப் பொருத்தப்பட்டு வருகின்றன.(ஓ-4-139)

## 10 வருடங்களின் பின்னர்

# அச்சுவேலி தபால் நிலையத்தில் தொலைபேசிச் சேவை ஆரம்பம்

## அமைச்சர் தொடக்கி வைத்தார்

அச்சுவேலி,ஜூன்16

தொடர்பாடல் அமைச்சர் இம்தி யாஸ் பாக்கீர் மாக்கார் அச்சுவேலி தபால்நிலையத்திற்கு விஜயம் செய்து தபால்நிலையத் தொலைபேசிச் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக்காலை 10.30 மணியள வில் தொடர்பாடல் அமைச்சர் பாக் கீர் மாகர் மற்றும் அமைச்சு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் அச்சுவேலி தபால்நிலையத்திற்கு விஜயம் செய்தனர்.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக இயங்காமல் இருந்த தபால் நிலையத் தொலைபேசிச் சேவையை அமைச்சர் அப்போது ஆரம்பித்து வைத்தார்.

அச்சுவேலி சனசமூக நிலையங் களின் சமாசம், அச்சுவேலி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் என்பன தனித்தனியே அமைச்சரிடம் "அச்சு வேலி தபால்நிலையத்திற்கு நிரந் தரமான கட்டடம் நிறுவப்படவேண் டும்" என வலியுறுத்தி மகஜர்களைக் கையளித்தன. மகஜர்களை ஏற்றுக் கொண்ட அமைச்சர், அச்சுவேலி தபால்நிலையத்தின் வசதிக்குறை வுகளை அவதானித்ததுடன் நிரந்த ரக் கட்டடம் அமைப்பதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளார்.(ஓ11)

# கொத்மலை மின்திட்டத்துக்கு மகாநாயக்கர் ஆதரவில்லை

## அமைச்சர் ஆறுமுகம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்16

மேல் கொத்மலை நீர்மின் திட் டத்தை செயற்படுத்த மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கர்கள் ஆதரவு தெரிவிக்க வில்லை என தேசிய உட்கட்ட மைப்பு, வீடமைப்பு அமைச்சர் ஆறு முகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மகாநாயக்கர்களின் வாசஸ்தலங் களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்த அமைச்சர், மேற்குறித்த திட்டத்தினால் ஏற்படக்கூடிய தீமை கள் குறித்து அவர்களுக்கு எடுத்து ரைத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த உரையாடலின்போதே 'மலையகத்தின் சூழலும் இயற்கை வனமும் பாதிக்கப்படுமானால் இத் திட்டம் கைவிடப்படுவது நல்லது' என்று மகாநாயக்கர்கள் தெரிவித் ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சருடன் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன், அமைச் சின் செயலாளர் ஹேகொட ஆகி யோரும் சென்றிருந்ததாகக் கூறப் படுகிறது. (ஓ-13)

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# முகாமைத்துவ உதவியாளர்கள் மறியல் போராட்டத்திற்கு முஸ்தீபு!

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் முகாமைத்துவ உதவியாளர்களா கக் கடமையாற்றும் உத்தியோகத் தர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் அலுவலகம் முன்பாக மறியற் போராட்டம் ஒன்றினை நடத்துவதறகு திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

முகாமைத்துவ உதவியாளர் களின் எதிர்கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ரிய சம்பள நிலுவைகள்,சம்பள உயர்வுகள் என்பனவற்றை வழங்கு வதுடன் அவர்களின் பதவி உறுதிப் படுத்தப்படவேண்டும் எனவும் -

இம்மாத இறுதிக்குள் இக் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்படா விட்டால் மேலதிக மாகாணக்கல் விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்னால் மறியற் போராட்டம் நடத் தப்போவதாகவும் யாழ்.மாவட்ட பட்ட தாரி பாடசாலை முகாமைத்துவ உதவியாளர்கள் சங்கம் திருகோண மலையிலுள்ள [illegible] கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலா ளருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி யுள்ளது. இதன் பிரதி யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாள ருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.(ஓ-4)

## சட்டவிரோத கள் விற்பனை:

# தென்மராட்சிப் பிரதேசத்திலும் 'தீனாகுறூப்' தோன்றும் ஆபத்து!

கைதடி,ஜூன்16

சட்டவிரோதமாக கள் விற்பனை செய்யப்படுவது அதிகரிப்பதால் தென்மராட்சி பகுதிகளிலும் 'தனா குறூப்புகள்' உருவாகும் நிலை தோன்றி வருவதாக அப்பகுதி மக் கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வேலம்பிராய், தச்சன்தோப்பு போன்ற பகுதிகளில் சட்டவிரோத மாக கள் விற்பனை செய்யப்படுவ தாக தெரியவருகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங் களால் பனை தென்னை வள அபி விருத்திச் சங்கக் கிளையின் கட்ட டம் உட்பட அனைத்தும் அழிந்த நிலையில், நாவற்குழிக் கிளைக்கு உற்பத்தி செய்யப்படும் கள்ளை வழங்குமாறு பொதுமுகாமையாள ரால் பணிக்கப்பட்டிருந்தபோதும் சட்டவிரோதமான முறையில் வீதிகளி லும் வீடுகளிலும் கள் விற்பனை செய யப்படுகின்றது.

இவ்வாறு விற்கப்படும் கள்ளை அருந்தும் இளைஞர்கள் போதை தலைக்கேற வீதிகளில் போவோரை பால், வயது வேறுபாடின்றி வம் புககு இழுப்பதும், முற்றகேடாக நடப்பதுமாக உள்ளனர்.

இந்நிலை நீடிக்குமானால் இந் தப் பகுதிகளிலும் 'தீனா குறூப்புகள்' தோன்றக் கூடும் என மக்கள் அச் சம் தெரிவிக்கின்றனர். (ஓ-13-ரி)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு!

கொடிகாமம்,ஜூன்16

கொடிகாமம் - கச்சாய் வீதியில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற் றுள்ளது.

சுட்டிபுரம் கோயிலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த முருகேசு இரத்தினம் என்பவரது தங்கச் சங்கி லியே இந்தச் சம்பவத்தில் அபகரிக் கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு வர் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (ஓ-13-ரி)

## மிதிவெடியில் சிக்கிப் படுகாயம்

கைதடி,ஜூன்16

மீளக்குடியமர்வதற்காக தனது வீட்டை துப்புரவு செய்து ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த பெண்மணி மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் நுணாவில் கிழக்கு பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்திலே கைதடி கிழக்கு பண்டகசாலையைச் சேர்ந்த திருமதி துரைச்சாமி இலட்சுமி (வயது 48) என்பவரே இடது பாதம் சிதறிய நிலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவராவர். (ஓ-13-ரி)

## 5 லொறிகளில் மருந்துகள் வந்தன

யாழ்ப்பாணம்,ஜூன்16

வடக்கில் உள்ள ஆஸ்பத்திரி களுக்கு தரைப்பாதை ஊடாக நேற்று 5 லொறிகளில் மருந்துப் பொருள் கள் எடுத்துவரப்பட்டன.

யாழ்.போதனா வைத்தியசாலைக் குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள் மூன்று லொறிகளிலும் சுகாதார சேவைகள் பணிமனைக்கு இரண்டு லொறிகளில் மருந்துப் பொருள்களும் எடுத்துவரப்பட்டன.

தற்போது குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் தேவையான அளவு மருந்துகள் உள்ளதாக மருத் துவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-139)

# சிலப்பதிகார விழாவில் மூத்த குருமார் கௌரவிப்பு

## மாணவர்களுக்கும் உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்16

இந்துகலாசார அமைச்சின் ஏற் பாட்டில் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் சிலப்பதிகார விழாவில் ஆதரவற்ற சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணம் வழங்கல், குருமார் கௌர விப்பு ஆகியன இடம்பெறவிருக்கின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரி விலும் சேவை மூப்புடைய பத்துக் குருமார்களுக்கு கௌரவிப்பும் -

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரி விலும் பாடசாலை செல்லும் ஆதர வற்ற 20 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கலும் -

இடம்பெறவுள்ளன என்று மேல திக அரச அதிபர் து.வைத்திலிங் கம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகளை நடத்துவதற்கு வசதியாக சிரேஷ்ட குருமார் மற் றும் ஆதரவற்ற மாணவர்கள் குறித்த விவரங்களை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன் தமக்கு அனுப்பும் படி மேலதிக அரச அதிபர் சகல பிரதேசச் செயலர்களையும் கேட்டுள் ளார். (ஓ-3)

# 4 ஆண்டுகளின் முன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்16

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் திருட்ப்பட்டதாகக் கூறப்படும் இரு மோட்டார் சைக்கிள்களை யாழ்ப் பாணப் பொலீஸார் சமீபத்தில் மீட் டுள்ளனர்.

நல்லூர் பிரதேசத்தில் கடந்த 98ஆம் ஆண்டு காலப்பகுதியில் களவாடப்பட்ட 'யமகா-90' ரக மோட் டார் சைக்கிள் ஒன்றும் 'யமகா-50' ரக மோட்டார் சைக்கிள் ஒன்றுமே பொலீஸாரால் மீட்கப்பட்டவையாகும்.

உரியவர்கள் தகுந்த ஆதாரங் களைக்காட்டி மோட்டார் சைக்கிள் களைப் பெற்றுக் கொள்ளலாம் என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.(ஓ-1[illegible])

# தென்னிலங்கை ஜோசியர்கள் மீண்டும் குடாநாட்டுக்கு வருகை

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப் பட்ட பின்னர் தென்னிலங்கையில் இருந்து பலவித விடயங்களும் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வருகை தரத் தொடங்கியுள்ளன. இவற்றில் சமீபத்திய வரவாக 'நினைத்த காரி யம்' கூறும் ஜோசியமும் வந்துள்ளது.

நேற்று யாழ்.ஆஸ்பத்திரி வீதி யில் தென்னிலங்கையில் இருந்து வந்த ஜோசியப் பெண்மணியிடம் 'தாம் நினைத்த காரியம் நிறை வேறுமா? நிறைவேறாதா?' என்று அறிவதற்காக ஏராளமான மக்கள் திரண்டிருந்ததைக் காணமுடிந்தது.

யுத்தச் சூழல் ஏற்படுவதற்கு முந்தைய காலகட்டத்தில் தென்னி லங்கையிலிருந்து பில்லி சூனியம் செய்வது, காட்டு மிருகங்களிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் விற்பது, 'மனதில் நினைத்ததை'க் கூறுவது என பல வகையான நபர்கள் குடாநாட் டுககு வருவது வழக்கம். ஆனால் நீண்டகாலமாக இல்லாதிருந்த இத் தகையவர்கள் மீண்டும் குடாநாட் டுக்கு வரத்தொடங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஓ-139)

# யாழ்.மண்ணின் பெருமைகூறும் மரவள்ளியின் பெறுமான அதிகரிப்பு

## பொருண்மியத் தகவல்

மரவள்ளிக்கிழங்கு எமது பாரம் பரிய உணவுகளில் ஒன்றாகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆயி ரத்து 300 ஏக்கர் அளவில் பயிர் செய்யப்படுகின்றது. விவசாய போத னாசிரியர் பிரிவுகளாகிய உரும்பி ராய், உடுவில், புத்தூர், தொல்புரம், கீரிமலை, கைதடி, சாவகச்சேரி போன்ற இடங்களில் கூடுதலாக செய்கை பண்ணப்படுகின்றது. உற்பத்தி செய்வதற்கு அதிக மூலதனம் தேவையில்லை. பயிர்ச்செய்கை இலகுவாகும். குறைநத செலவில் கூடிய வருமா னம் பெறுவதால் விவசாயிகள் விரும்பிப் பயிரிடுகிறார்கள். எவ் விதமான மண்வளத்திலும் வள ரக்கூடியது. அத்துடன் வரட்சியைத் தாங்கும் பயிராகும். நோய், பூச்சித் தாக்கம் என்பன இதற்கு ஏற்படுவது இல்லை. மரவள்ளியை பொறுத்த வரையில் அறுவடை செய்யாமல் சில காலம் விட்டுவைக்கலாம். எமது மாவட்டத்தில் பொதுவாக ஒரு கிலோ ரூ.3 - 10/- வரை விற்பனை செய் யப்பட்டு வருகின்றது.

மரவள்ளிக்கிழங்கை அவிக்கும் போதோ, சமைக்கும்போதோ மூடா மல் சமைக்க வேணடும். மரவள்ளி உணவுடன் இஞ்சி சேர்நத உணவு கள் சேர்ப்பது தவிர்ககப்படவேண் டும். கிருமிநாசினி பயன்பாடு அற் றது. இது ஏழைமக்களின் பிரதான உணவுப் பொருளாகும்.

பொதுவாக விவசாயிகள் மரவள் ளிக்கிழங்கை சந்தைக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்தமுடியாது வேதனைப்படுகின்ற சந்தர்ப்பங் களும ஏற்படுகின்றன. இப்படி கந் தையா என்ற விவசாயி சந்தைக்கு கொண்டு சென்ற கிழங்கை விற்க முடியாது திருப்பி வீட்டிற்கு கொண்டு வரும்போது அவருக்கும் அவர் மனைவி பூரணத்திற்கும் இடையில் நடத்த உரையாடலே இது -

பூரணம்:- ஏனப்பா, இன்றைக்கு வியாபாரம் இல்லையோ? கொண்டு போன முழுவதையும் திருப்பிக் கொண்டுவாறியள்.

கந்தையா:- அதையேன் கேட் கிறாய். சந்தையில் ஒரே மரவள்ளிக் கிழங்காக இருந்தது. கிழங்கு மலி வாப் போச்சு, மக்களும் நாடேலை. இப்ப இதை என்ன செய்கிறது? ஆடு, மாட்டுக்கு வைக்கிறதோ? அல்லது வெட்டித் தாப்பமோ?

பூரணம்:- ஏனப்பா, உப்பிடி கோபப்படுகிறியள். நான் இண்டைககு எங்கடை உருத்திர வாசிகசாலை யில் நடந்த பயிற்சி வகுப்புக்குப் போன னான். அங்கை விவசாய திணைக் களத்தாலை ஒரு அம்மா வந்து மர வள்ளிக்கிழங்கில் இருந்து 7-8 வகை யான உணவுகள் தயாரித்துக் காட் டினது. சீவல் போடுகிற முறை பற் றியும் சொன்னா.

கந்தையா:- (ஆச்சரியத்துடன்) உண்மையாய்த்தானே சொல்கிறாய், அப்ப எங்கடை மரவள்ளிக்கிழங் கையும் பிரியோசனப்படுத்தலாமோ?

பூரணம்:- ஏன் பிரியோசனப் படுத் தேலாது? மரவள்ளிமாவில் இருந்து கேக், புட்டு, பகோடா, றொட்டி, பொரி யல், பிஸ்கட் போன்ற சிற்றுண்டி வகைகளைச் செய்து காட்டினவா. நாங்கள் உதிலை அரைவாசியை பகோடா, பொரியல் (சிப்ஸ்) செய்து பொதி செய்து கடைக்குக் கொடுப்பம். எங்களுக்கு உடனே செலவுக்கு காசு கிடைக்கும். மிகுதியை அந்த அம்மா சொன்ன முறையில் சீவலாக் கிப் போடுவம். இதைப் பயன்படுத்தி புட்டு, இடியப்பம் அவிப்பம். நல்ல சத்தும் கிடைக்குது. காசையும் மீதப் படுத்தி சேமிக்கலாம். அதோடை எங் கடை பிள்ளைகளின்ரை பிறந்த நாளுக்கு உந்தளவு செலவழிச்சு கேக் அடிக்காமல் மரவள்ளி மாவிலை கேக் அடிப்பம். செலவு குறைவு. நல்ல சுவையாகவும் இருக்கும்.

கந்தையா:- அப்ப, உதுக்கு நிறைய செலவாகுமோ? இண்டைக்கு வியா பாரமும் இல்லை.

பூரணம்:- இதுக்கு பெரிய செலவு ஒன்றும் இல்லை, எண்ணெய்தான் வேணும். மற்றது மிளகாய்த்தூள், வெங்காயம் போன்ற சமான்கள் வீட் டிலை இருக்குது தானே. எங்கடை பிள் ளைகளும் நாங்களுமே இதைச் செய் வம். இப்பவே இதைத் தொடங்குவம்.

(குடும்பத்தவர்கள் அனைவரும் சேர்ந்து செய்து கடைக்குக் கொடுத்து கூடுதலான வருமா னத்தைப் பெற்று சந்தோசம் அடை கிறார்கள்)

கந்தையா:- பார்த்தியேப்பா, எங் களுக்கு இதாலை எவ்வளவு வருமா னம் கிடைச்சிருக்கு, நீ அந்த வகுப்புக்கு போனதால எவ்வளவு பிரியோசன மாய் போச்சுது. நாங்கள் உப்பிடியே இனிமேல் செய்து விற்பம்.

பூரணம்:- உது மட்டுமே. நான் அண்டைக்கு என்ரை சிநேகிதி பார் வதியிட்டை நல்லூருக்குப் போன பொழுது தானும் அங்கையொரு பயிற்சி வகுப்பிலை பங்குபற்றி அவுஸ்திரேலியாவில் இருக்கிற தன்ரை அக்காவிற்கு பகோடாவும் பொரியலும் செய்து அனுப்பி அவை யும் நல்லது என்று பாராட்டினவை யாம். இப்ப பாருங்கோ மரவள்ளிக் கிழங்கின் மகத்துவத்தை.

கநதையா:- முந்தி, நான் சின் னப பொடியனாய் இருக்கேக்கை என்ரை தாய், தகப்பனும் மிஞ்சுகிற கிழங்கைச் சீவி காயவிட்டு புட்டு, றொட்டி செயது தந்தவைதான். எனக்கு இப்ப ஞாபகம் வருகுது. உந்த அமெரிக்கனின் கூப்பன் மா வந்த தில் இருந்து எல்லாம் மாறிப்போச்சு, மறந்துபோச்சு. இப்பத்தை பிள்ளை களுக்கு உதொண்டும் தெரியாது. உந்த அம்மா வந்தெண்டாலும் நினைவுபடுத்திப்போட்டா. எல்லாம் கடவுள் செயல்தான. இனிமேல் உப்பிடியான வகுபபுகளுக்கு கட் டாயம் நேரம் ஒதுக்கி போகவேணும்.

பூரணம்:- இப்ப என்றாலும் உங்க ளுக்கு ஞானம் வந்திருக்கு. அதுவே போதும். இனி எல்லாரும் இப்படி யான பயிற்சி வகுப்புக்கு கட்டாயம் போவோம். ☆

ஆக்கம்
திருமதி.ச.சண்முகதாஸ்

**CERTIFICATE IN PSYCHOLOGY**

(POSTAL COURSE - TAMIL MEDIUM)

For whom: G.C.E. O/L or A/L, School leavers, University students & Degree holders, School or Training college teachers, SSO, PO, Physical Education students or teachers, Executives and others.

*Contact:* **ACA - Director, HSCME, NAVALY NORTH, MANIPAY.** (4900)

**உடன் தேவை**

கொழும்பில் பத்திரிகை விநியோகம் செய்வதற்கு மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் உடையவர்கள் உடன் தேவை. தங்குமிட வசதி அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். நேரில் வரவும்.

**மனித வள அலுவலர்,**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (C-22531)

## கண்ணீர் அஞ்சலி

வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்
**கி.தவராசா** அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னவன் கிருஸ்ணன்**

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
வடமாகாண தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.

(C/22536)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர்
**கி.தவராசா** அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னவன் கிருஸ்ணன்**

அவர்கள் காலமாகியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
**தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி,**
**கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்,**
**பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.**

(C/22537)

## முருகானந்தா சனசமூக நிலையம் - நவாலி

மேற்படி நிலையம் பொன்விழாவை முன்னிட்டும், புதிய கட்டடத் திறப்புவிழாவை முன்னிட்டும் பின்வரும் போட்டிகளை நடத்தவிருக்கிறது.

1. **கரபந்தாட்டம்** *(ஆண்கள்) (Setup Game)*
   யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் *Setup Game* முறையில் நடத்தப்படும்.
2. **வலைப்பந்தாட்டம்**
   சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டு அணிகளுக்கிடையில் நடத்தப்படும்.
   *விண்ணப்ப முடிவு திகதி:* **25.06.2002**
3. **நாடகப் போட்டி**
   யாழ். மாவட்டத்தில் உள்ள நாடக மன்றங்களுக்கிடையில் நடைபெறும்.

**பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.**

*விண்ணப்ப முடிவு திகதி:* **10.07.2002**

*அனுப்ப வேண்டிய முகவரி:* முருகானந்தா சனசமூக நிலையம், நவாலி. (4882)

## வட்டுக்கோட்டையில் பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜூன்16

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் நடத்தப்படவுள்ள மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சை முகாம் சேவையின் கீழ் நாளை முதல் 21ஆம் திகதிவரை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பற்சிகிச்சைகள் மேற்கொளளப்படவுள்ளன.

இந்த ஐந்து நாள்களும் வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்படும்.

இவ்விரு பிரிவுகளையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களில் பற்சிகிச்சைக்கென தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தவறாது சமுகம் கொடுத்து சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-15)

## கல்விசார் ஊழியர் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்

அச்சுவேலி,ஜூன்16

கல்வி ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கனக் கடன் வழங்கு சங்கத்தின் (ஈ.ரீ.சீ.சு.எஸ்) உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்விப் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை ஜூலை 30 திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கனக் கடன்உதவிச் சங்கத்தின் உறுப்பினர்களான ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் ஊழியர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தால் புலமைப்பரிசில் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-11)

## கோப்பாய் கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு!

அச்சுவேலி,ஜூன்16

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்நாளை திங்கட்கிழமை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெற உள்ளது.

திங்கட்கிழமை நண்பகல் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கோப்பாயக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ஒ-11)

**ஜெசித்தாராவின்**

புதியகேரளத் தயாரிப்பான

**குங்குமப் பூ புரியாணி**
**&**
***சிலிசிக்கன்***

***அதிகசுவை – புதுப்பொலிவு***

**ஜோ - எகட்டனின் ஜெசித்தாரா**

19/3. கண்டுக்குளி மகளிர் கல்லூரி ஒழுங்கை.
கண்டுக்குளி - யாழ்ப்பாணம். (4904)

# செம்மணிக்குளம் புனரமைப்பு

இருபாலை தெற்கில் உள்ள செம்மணிக்குளம், வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் (நியாப்) புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டால் நாயன்மார்கட்டு, செம்மணி வீதி, சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலடி, ஆனந்தபுரம், ஞானவைரவர் கோயிலடி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயக் காணிகளுக்கு தேவையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

இப்புனரமைப்பு வேலைகள் உடன் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாககோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ-180)

**இறுதி வருட வணிகத்துறை மாணவர்களுக்கான**

## முக்கிய அறிவித்தல்

அனைத்து வணிகத்துறை இறுதிவருட மாணவர்களும் நாளை (17.06.2002) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் குழுப் புகைப்படம் எடுப்பதற்காக உரிய ஆயத்தங்களுடன் பல்கலைக் கழகத்திற்கு சமுகந்தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

வணிக மாணவர் மன்றம்,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(4903)

# மரண அறிவித்தல்கள்

## பண்டிதர் தம்பிமுத்து செல்வரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் பண்டிதர் தம்பிமுத்து செல்வரத்தினம் அவர்கள் 12.06.2002 புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஆசிரியை பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் கண்மணி, காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், கந்தவனம் அகியோரின் அருமைச் சகோதரனும் கோகுலதாஸ் (பிரான்ஸ்), சிறியா (ஜேர்மனி) மற்றும் லண்டனில் வசிபபவர்களான மோகனதாஸ், ரஞ்சனதாஸ், விக்ரற் அன்ரன் றெமி (இத்தாலி), சிறானி ஆகியோரின் அப்பாவும் சோதி, கவிதா, பிரதீபா, சிவாணந்தம், பத்மலோஜினி, பிரேமதாஸ், ரகுதாஸ், அற்புதராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசசிங்கம் காலஞ்சென்ற குணசிங்கம், வீரசிங்கம், பவசிங்கம், திருமதி சைமன் நடராசா, சத்தியசீலன் ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (18-06-2002) செவ்வாய்க் கிழமை லண்டனில் நடைபெறவுள்ளது. அதையொட்டி அன்னாரின் ஏழாலை இல்லத்திலும் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு இரங்கல் ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
**க.பாலசிங்கம்** (மைத்துனர்)
திருமதி கிருபா பாலசிங்கம் (சகோதரி)

(4899)

## நாகமணி கந்தையா

காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும் 266, அளுத் மாவத்தை, கொழும்பு-15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி கந்தையா (முன்னாள் அதிகாரி, விற்பனைத் திணைக்களம்) நேற்று (15.06.2002) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - நாகம்மாவின் அன்பு மகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் அமுதவல்லி, அமுதராசா, அமுதவசனி, அமுதறஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பரமலிங்கம் (வர்த்தகர், வவுனியா), நேசமலர், சிவாயநம, மகேந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் பிரதீபன், வாகினி, வாமினி, வாசுகி, சிந்துஜா, கிருசன், பிரவீணா, பிரசாத், கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புத் தம்பியும் சிவலிங்கம், மகேஸ்வரி, அன்னலட்சுமி, அம்பிகை, கனகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (20.06.2002) வியாழக் கிழமை பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*266, அளுத் மாவத்தை,*
*கொழும்பு - 15*

தகவல்:
**க.பரமலிங்கம்** (மருமகன்)

(4901)

**க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு** குடும்பமாக பரிசுகளை வெல்லுங்கள்

க்லோகாட் ரயிலுடன் இன்றே இணையுங்கள்



க்லோகாட் மூலம் உங்கள் குடும்பத்தினர் அனைவரும் பரிசுகளை வெல்ல இதோ ஓர் நல்ல சந்தர்ப்பம் நீங்கள் செய்ய வேண்டியது உங்கள் பெயர், முகவரி என்பவற்றுடன் ஏதாவதொரு க்லோகாட் பெட்டி ஒன்றையும் இணைத்து அனுப்ப மறக்க வேண்டாம். நீங்கள் பரிசு வெல்லும் அதே நேரத்தில் உங்கள் விற்பனையாளரும் பரிசு வெல்வார்.

**முதலாவது அதிர்ஷ்டமடையும் குடும்பத்திற்கு**

21'' கலர் தொலைக்காட்சி, கசட் பிளெயர், சலவை இயந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்பன பரிசுகளாகக் கிடைக்கும்.

**இரண்டாவதாக அதிர்ஷ்டமடையும் மூன்று குடும்பங்களுக்கு மூன்று பரிசுகள்**

21'' கலர் தொலைக்காட்சி, காஸ்குக்கர், பிளெண்டர், VCD பிளெயர் ஒன்று.

**விற்பனையாளர்களுக்கும் பரிசு**

அதிர்ஷ்டமடைந்த நான்கு குடும்பங்களின் விற்பனையாளர்களுக்கும் நான்கு டீப் ஃபிரிசர்கள்.

**ஆறுதல் பரிசுகள்**

100 ஆறுதல் பரிசுகளாக ஹேமாஸ் சந்தைப்படுத்தல் வழங்கும் 100 பரிசுப் பொதிகள்

**முதலாவதாக அனுப்பி வைப்போருக்கு**

முதலாவதாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைப்போரில், 650 பெயர்களுக்கும் அவர்கள் விற்பனையாளர்களுக்கும் அழகிய டிஷேட் ஒன்று.

உங்கள் விண்ணப்பப்படிவங்களை ஜூலை 19 ஆம் திகதி 2002 இக்கு முன் அனுப்பி வையுங்கள்

க்லோகாட் கோச்சியில் சென்றால் பரிசு – த.பெ.இல. 911 கொழும்பு.

க்லோகாட்

Masters DDB LN: C/38/2002

# கொழும்பு விலையில் பெற்றோல் குடாநாட்டில் கிடைக்கவேண்டும்

## பல்கலை அலுவலர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜுன்16

நாட்டின் பிற இடங்களைப் போன்று குடாநாட்டிலும் ஒரு லீற்றர் பெற்றோல 54 ரூபாவுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் யாழ். பல்கலைக்கழக நிறைவேற்று அலுவலர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஒன்றியம் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இப்போது குடாநாட்டில் பெற்றோல் லீற்றர் ஒன்று 79 ரூபாவாக விற்கப்படுகிறது. 1996ஆம் ஆண்டில் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், நாட்டின் பிற பாகங்களில் ஒரு லீற்றர் பெற்றோல் 50 ரூபாவாக விற்கப்பட்டபோது இங்கு லீற்றர் 77 ரூபாவாக விற்கப்பட்டது. இந்த விடயம் குறித்து குடாநாட்டு மக்களால் கேள்வி எழுப்பப்பட்டபோது கடல் மார்க்கமாக குடாநாட்டுக்கு எரிபொருள் எடுத்துவரப்படுவதே இந்த மேலதிக விலையேற்றத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

ஏ-9 தரைப் பாதை திறக்கப்பட்டு விட்ட இந்தச் சமயத்தில் கொழும்பு விலைக்கே யாழ்ப்பாணத்தில் பொருள்களை வாங்கக்கூடியதாக உள்ளது. ஆகவே, நாட்டின் பிற பகுதிகளில் தற்போது பெற்றோல் ஒரு லீற்றர் 54 ரூபாவாக விற்கப்படுவதைப் போன்றே, யாழ்ப்பாணத்திலும் விற்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். தரைப்பாதை வழியாக பெற்றோலை எடுத்து வந்து, 54 ரூபாவுக்கே அதனை குடாநாட்டில் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தித் தரவேண்டும்.

- என்று அதில் உள்ளது. (ஒ)

# மீனவர் சமாசம் அமைக்க ஊர்காவற்றுறையில் முயற்சி

ஊர்காவற்றுறை,ஜுன்16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து பிரதேச கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச கடற்றொழில் குழுக் கூட்டத்திலேயே மேற்படி சமாசம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

இங்கு சமாசம் ஒன்றினை அமைப்பதன் மூலம் சங்கங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் குளிரூட்டப்பட்ட வாகனம் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றிற்கு இலகுவாக இருக்குமெனவும் -

அதேவேளை குருநகரில் கண்ணாடி இழை வள்ளங்கள் இறக்கப்பட்டுள்ளதாகவும் மீனவர்கள் அதனை பார்வையிட்டு இப் பிரதேசத்திற்கு அத்தகைய வள்ளங்கள் பொருத்தமானதா என தெரிவித்தால் அத்தகைய வள்ளங்களை ஊர்காவற்றுறைப் பகுதியிலும் பயன் படுத்த வசதியேற்படுத்தப்படும் என்று கடற்றொழில் பரிசோதகர் அங்கு தெரிவித்தார்.

அத்துடன் சீநோர் தொழிற்சாலையை மீள இயங்க நடவடிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-16)

# சுகாதாரப் பரிசோதகர்களுக்கு இலவச மோட்டார் சைக்கிள்கள்

தென்மராட்சி,ஜுன்16

யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

மாவட்டத்தில் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும்வண்ணம் ஜப்பானிய அரசு இந்த மோட்டார் சைக்கிள்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக மாவட்டத்தில் கடமையாற்றும் 30பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் -

இவர்களின் பெயர் விவரங்கள் யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# ரூபாத் தாள்களை எண்ண வேண்டுமா?

பணத்தை வைத்திருப்பது என்பது ஒரு கஷ்டமான விடயந்தான். பணத்தைத் தேடிச் சேர்ப்பதிலும் பார்க்க அதனைப் பாதுகாப்பாக வைத்திருப்பது கடினமாகிறது.

இதனை இலகுவாக்க, மனிதன் பலவழிமுறைகளைக் கையாள முற்பட்டான். அதிலொன்று வங்கியில் பணத்தை வைப்பிலிட்டு அதன் மூலமாகப் பணப்பரிமாற்றங்களைச் செய்வதாகும்.

திரவப் பணத்தைக் கையாளாமல், சிறிய ஓர் அட்டையைக் கொணடு திரிந்தே இலத்திரனியற் பணப்பரிமாற்றங்களைச் செய்யப் பெரும்பாலான மனிதர்கள் பழகிவிட்டார்கள்.

சேமித்த பணத்தையும் ஓர் அட்டையிலுள்ளடக்கி அதனிலிருந்து பரிமாற்றம் செய்யலாம். மேலதிகமாகக் கடன் தேவைப்பட்டாலும் ஓர் அட்டை மூலம் அதனைப் பெறலாம்.

இதற்கு முற்பட்ட காலத்தில் காசோலைகள் பணத்திற்குப் பதிலாகப் பரிமாற்றப்பட்டன. தொகையாகப் பொருள்களை வாங்கி விற்கும் ஒரு வியாபாரி, விற்ற பொருள்களின் கிரயத் தொகைக்குக் காசோலையைப் பெற்றுக்கொள்கிறான். இவ்வாறு பெறும் காசோலைகளை வங்கியுள்ள தனது கணக்கில் வைப்பிலிட்டு, ஒரு காசோலை மூலம் பணத்தைச் செலுத்தி மீண்டும் பொருள்களை வாங்குகிறான். அல்லது தனது வங்கிக் கணக்கிலிருந்து விற்பனை செய்யும் வங்கிக் கணக்கிற்குப் பணப் பரிமாற்றம் செய்து பொருள்களை வாங்குகிறான். இந்நிலைதான் இன்றும் எம்மிடையே காணப்படுகிறது.

இதற்கும் முற்பட்ட காலத்திலே தான் திரவப் பணமூலமே பணப் பரிமாற்றம் செய்யமுடியுமென்ற கருத்து




நிலவியது. ஆனால், அதே கருத்துக் கொண்டவர்களை இன்றும் நாம் சந்திக்கின்றோம்.

"சம்பளத்தைச் செக்காய்த் தாற தாலை பெரிய கரைச்சல் பாருங்கோ. கொமிஷன் கொடுத்தெல்லே மாற்ற வேண்டியிருக்கு."

சம்பளத்தைக் காசோலையாகப் பெற்ற ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

"பாங்கிலை போய் இன்றைக்குச் சம்பளம் எடுக்கவேணும். எங்கடை நிறுவனம் வங்கியிலைதான் சம்பளம் கொடுக்குது. அதிலை வேலை செய்கிற நாங்கள் அங்கை போய் மினைக்கட்டு சம்பளம் வாங்கத்தானே வேணும்." இது மற்றொருவரின் முடிவு.

ஏன் இவர்கள் இப்படி நினைக்கிறார்கள்?

பணத்தை எடுத்துவந்து பணியகத்தில் ஊழியர்களின் ஊதியத்தைப் பகிர்ந்தளித்த வேளையில் களவுகளும் வேறு பிரச்சினைகளும் தலைதூக்கியதால் வங்கி மூலம் சம்பளம் வழங்க ஆரம்பித்து பல ஆண்டுகளாகிவிட்டன.

ஆனால், நாம் வங்கிக் கணக்குகளை உபயோகித்து, திரவப்பணமின்றியே காசோலைகள் மூலம் பணப் பரிமாற்றம் செய்ய இதுவரை முற்படவில்லை. திரவப் பணத்திற்கான தட்டுப்பாடு உச்சமடைந்திருந்த வேளையிலேகூட அதிக தரகுக் கூலி கொடுத்து காசோலைகளைத் திரவப் பணமாக்கியே செலவு செய்தோம்.

வங்கியில் ஒரு நடைமுறைக் கணக்கை ஆரம்பித்து சம்பளத்தை அதில் வரவு வைக்க ஒழுங்கு செய்தோமானால் நாம் பணத்திற்குப் பதிலாகக் காசோலைகளை வழங்கலாம்.

காசோலைகளைக் கொடுத்தால் வாங்கிக்கொள்வார்களா? என்ற ஐயக்கம் எமக்கிருக்கலாம். இன்று வியாபாரம் செய்யும் பெரும்பாலானோர் வங்கிக் கணக்கொன்றை வைத்திருக்கறார்கள் என்பது நமக்குத் தெரியாதிருக்கலாம். அப்படி இல்லாவிட்டாலும் அவர்கள் ஒரு கணக்கை ஆரம்பிப்பதில் கஷ்டம் எதுவும் இல்லையே.

அரசாங்கம் ஆயிரம் ரூபா நிவாரணம் தரப்போகிறது என்றால் ஒரு கணக்கை ஆரம்பிக்க நாம் தயாராக இருக்கிறோம். வாடிக்கையாளர் பலர் காசோலைகளைத் தருவார்களென்றால் ஒரு வியாபாரி வங்கிக் கணக்கொன்றை நிச்சயம் ஆரம்பிப்பார். அவரது பொருள் கொள்வனவுக்கும் அது பயன்படுமே.

அடுத்து, மாதாந்தம் ஒரு குறித்த தொகைப் பணத்தைக் கொடுக்க வேண்டியிருந்தால் அப்பொறுப்பை

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**
**மக்கள் வங்கி,**
**பல்கலைக்கழகக்கிளை,**
**யாழ்ப்பாணம்.**

வங்கியிடமே கொடுத்துவிடலாம். உதாரணமாக வீட்டுவாடகை, பாடசாலைப் போக்குவரத்து வாகனத்துக்கான கொடுப்பனவு ஆகியவற்றை எமது கணக்கிலிருந்து வீட்டுக்காரரின் கணக்கிற்கும் வாகனச் சொந்தக்காரரின் கணக்கிற்கும் மாற்றுமாறு நிலையான கட்டளையொன்றை வங்கிக்குக் கொடுத்துவிடலாம்.

அதேபோல், ஒரு சிறு தொகையை பிள்ளைகளின் பெயரிலும் எமது பெயரிலும் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றுமாறு கூறிவிட்டு சிலகாலம் சென்றதும் அக்கணக்கைப் பார்த்தால் நாமே அசந்துவிடுவோம்.

அவசர தேவையொன்று ஏற்படுமாயின் அந்தச் சேமிப்பையே பிணையாகக் கொடுத்து ஒரு நிரந்தர மேலதிகப்பற்று வசதியை உருவாக்கிக் கொள்ளலாம் அல்லது கடனைப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிப் பல வகைகளில் இலகுவாக இருந்த இடத்திலேயே செயற்படுத்தக்கூடிய வங்கிச் சேவை வசதிகள் இருந்தும் கையில் காசோலையுடன் ஏன் நாம் அலைகிறோம்? சம்பள தினம் என்றதும் முட்டிமோதிக்கொண்டு சம்பளப் பணத்தை முழுமையாகக் கையிலே வாங்கி எண்ணி மகிழ்வதில் அப்படி என்ன சந்தோஷம் இருகிறது? அப்பணம் கையில் வைத்திருக்கும் பனிக்கட்டிதானே.

இலத்திரனியல் பணம் இங்கும் வரப்போகிறதாமே? அதனைக் கையாளத் தயாராகுவோமா? நம் நடைமுறைகளை இனிமேலாவது மாற்றிக் கொண்டு புதிய நடைமுறைகளைத் தயக்கமின்றி கையாளப் பழகிக் கொள்வதென இன்றே தீர்மானிப்போம். ☆

# 'திருவருள்' ஒலி நாடா வெளியீடு!

யாழ்ப்பாணம்,ஜுன்16

ஈழத்து திருத்தலங்கள் மீது பாடப்பட்ட 'திருவருள்' பக்திப் பாடல்கள் ஒலிநாடா வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நா.வரதராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் யாழ்ப்பாணம் கல்வி வலயப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கலந்து கொள்கிறார். (ஒ-13)

# தாவடியில் திருட்டு

தாவடி,ஜுன்16

தாவடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள வீடொன்றில் ஒரே இரவில் 3 சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் கடந்த சில மாதங்களாகத் தணிந்திருந்த இத்தகைய திருட்டுக்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13-ரி)

# மருதங்கேணி அபிவிருத்திக்கு ஏற்பாடு

செம்பியன்பற்று, ஜுன்16

மருதங்கேணி பிரதேசத்தை புனரமைப்பதுடன் அபிவிருத்திப் பணிகளையும் மேம்படுத்த வேண்டும். இதற்காக சகல திணைக்களங்களுடனும் கலந்துரையாடி நடவடிககைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

கடந்த மாதம் 15ஆம் திகதி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை திறப்பு நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இப்பகுதியின் சுகாதாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் பெறுவதற்கு உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி உடனடியாக ஒழுங்கு செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

இத் திறப்பு விழாவில் பிரதேச செயலர்கள், யாழ்.செயலக உயர் அதிகாரிகள், மாவட்ட கடற்றொழில் உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ-13-ரி)

# பலப்படுத்தப்படும் படைநிலைகள்

யாழ்ப்பாணம், ஜுன்16

யாழ்குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் முகாமிட்டுள்ள படையினர் தமது நிலைகளைப் பலப்படுததி வருகின்றனர்.

சரசாலை, கனகன்புளியடிச் சந்தி, வண்ணாத்திப்பாலம் போன்ற பகுதிகளில் காவலரண்கள் அமைத்தும், முட்கம்பிச் சுருள்கள் போடப்பட்டு பலப்படுத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதேபோல அரியாலை பொன்னம்பலம் வீதியில் உள்ள சில வீடுகளில் படையினர் நிலைகொண்டு முகாம் அமைத்துள்ளதுடன், முள்ளிப் பகுதியில் புல்டோசர்களை பயன்படுத்தி அரண்கள் அமைப்பதாகவும்-

ஆனந்தன் வடலி வீதி, நெடுங்குளம் பகுதியில் மீண்டும் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது. (ஒ-13-31-86)

# மூட்டுவலியை விரட்டும் புதிய நிவாரணி 'ரிகோவா'

வாலிப பருவம் முதல் வயோதிப பருவம்வரை அனைவரையும் பாதிக்கும் உபாதைகளில் மூட்டுவலியும் ஒன்றாகும்.

படிக்கட்டுக்களில் ஏறுதல், நடத்தல், ஓடுதல், சமைத்தல் என அனைத்து வேலைகளிலும் மூட்டுக்கள் உடல் அமைப்பில் இன்றியமையாத ஒரு கூறாகும்.

"மூட்டுக்கள் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படலாம். உதாரணமாக சிறுவயதில் நடக்க ஆரம்பிக்கும் குழந்தை தட்டுத்தடுமாறி விழும்போது முதலில் பாதிப்படைவது முழங்கால் ஆகும். இங்குதான் முக்கியமான மூட்டு உள்ளது. எனினும், வளரும் குழந்தை இவ்வாறு கீழே விழும் போது மூட்டுக்கள் பாதிப்படைவதில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவற்றில் குழந்தை பருவத்தில் மூட்டுக்கள் தொடர்ச்சியாக அபிவிருத்தி (வளர்ச்சி) அடைதல், குழந்தையின் உடல் நிறை என்பனவும் அடங்கும்.

மூட்டுவலி ஏற்பட பல காரணங்கள் உண்டு.

விளையாட்டின்போது ஏற்படும் விபத்துக்கள், மூட்டு உடைவு, இடம் மாறிய மென் இழையம், கிழிந்த மென் இழையம், தொழில் புரியும்போது ஏற்படும் பாதிப்புக்கள் போன்றவற்றால் மூட்டுவலி ஏற்படக்கூடும். மூட்டுக்களில் ஏற்படும் நோய்க்கிருமிகளின் தாக்கம், உடற் தொழிற்பாடுகளின் மூலம் ஏற்படும் மூட்டு நோய்கள், மருந்துகள் ஏற்படுத்தும் தாக்கங்கள், நீரிழிவு நோய், உடல் நிறை அதிகரிப்பு, வயோதிப நிலை போன்றவையும் மூட்டுவலிக்கு காரணமாகின்றன. மூட்டுக்கள் சிறு பராயத்தில் வளர்வது போல வளர்ந்தோரில் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைவதில்லை. மேலும் மூட்டுக்களின் உள்ளே எலும்பு முனைகளை மூடி 'மென் இழையம்' என்ற எலும்புப் பகுதி உள்ளது. இரு எலும்பு முனைகளிடையே உராய்வு ஏற்படுவதை மென் எலும்பு தடுக்கின்றது. உராய்வு ஏற்படின் வலி ஏற்படும். எனவே மென் எலும்பில் பாதிப்பு ஏற்படும்போது மூட்டுவலி ஏற்படும்.

மூட்டு வலியைப் போக்க பல்வேறு வலி குறைப்பு, வலி நீக்கி மருந்துகள் பாவிக்கப்படுகின்றன. இம்மருந்துகள் வலியை, வேதனையைக் குறைக்கும். ஆனால் மூட்டுக்களை மீளமைக்கமாட்டாது.

வேதனை குறைந்தவுடன் நோயாளி தொடந்து தினசரி வேலைகளை மேற்கொள்வார். எனவே மூட்டுக்களின் உள்ளமைப்பு மேலும் பாதிக்கப்படும். இறுதியில் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிவரும்.

அதேவேளை, மருந்துகள் பக்க வினைவுகளை ஏற்படுத்தும். இவற்றில வயிற்றுப் புண் பிரதானமானது. மருந்துகளைப் பாவிக்காவிடின் வலி தொடரும். எனவே மூட்டு வலியிலிருந்து மீள்வதற்கு மூட்டுக்கள் புனரமைக்கப்படவேண்டும் அல்லது புதுப்பிக்கப்படவேண்டும்.

மேலை நாடுகளில் தற்போது "குளுக்கோசமின்" எனும் புதிய மருந்து பாவிக்கப்பட்டு வருகின்றது. இம்மருந்து மூட்டு வலியிலிருந்து முற்றாக நிவாரணம் அளிக்கின்றது. மற்றும் பாதிக்கப்பட்ட வலிமிக்க மூட்டுகளை மீளமைக்கின்றது. "குளுககோசமின்" உணவில் காணப்படும் ஒரு புரதசேர் சீனியாகும். இது மென் எலும்பு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றது. இலங்கையில் தற்போது குளுக்கோசமின் "ரிகோவா" (RECOVA) எனும் பெயரில் விற்கப் படுகின்றது. "ரிகோவா"ஐ ஆர்கேம் (ARKEM) நிறுவனத்தினர் இந்தியாவில் புகழ் பெற்ற மெஸ்கர் (MESKER) நிறுவனத்திடம் இருந்து இறக்குமதி செய்கின்றனர். "ரிகோவா" மருத்துவ ஆலோசனையுடனோ அல்லது நேரடியாக மருந்தகத்தில் இருந்தோ பெற்றுக்கொள்ளலாம். எனவே மூட்டு வலிக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

தற்போது "ரிகோவா" யாழ். மாவட்டத்தின் எல்லா முன்னணி மருந்துக் கடைகளிலும் பெறக்கூடியதாக உள்ளது. ☆

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

150dl ரக மோட்டார் சைக்கிள் ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ரவி, கொக்குவில் மேற்கு, குளப்பிட்டி. (4732)

பூச்சி நீக்கிய, 45 நாள்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ.குணரட்ணம், மடத்தடி, கந்த ரோடை, சுன்னாகம். (4827)

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (4862)

மானிப்பாய், நவாலி றோட் (இடிகுண்டடி)இல் 50பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. மேலதிக விவர தொடர்பிற்கு:- மு.து[illegible]ன், பொன்மலர் களஞ்சியம், அளவெட்டி. T.P.No.:070-212558, 01-593127, 078-679807. (4821)

டபிள் றீட்ஸ் ஆர்மோனியம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. அமலன், 18/2, கோயில் ஒழுங்கை, நாவாந்துறை, யாழ்ப்பாணம். (4879)

A-40 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J.யேசுதாசன், 75, கதீற்றல வீதி, ஆயர் இல்லம் முன்பாக, யாழ்ப்பாணம் அல்லது 10, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (4970)

50 நாள்கள் நிரம்பிய, பூச்சி நீக்கப்பெற்ற டாசோன் (Dashound) நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவுனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (4890)

கல்வியங்காட்டில் பருத்தித்துறை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் 11/2 பரப்புக்காணி 4 அறைகளுக்கும் ஒரு Hall க்குமான அத்திவாரத்துடன் விற்பனைக்கு உண்டு. கிணறு, மலசலகூடம், மின்சார வசதியும் வாகனம் போக்குவரத்துக்கான வசதியும் உண்டு. Survey Plan முதலான விவரங்களுக்கு: க.அம்பிகபாகர், 38, சிவன் கோயில் றோட், திருநெல்வேலி தெற்கு. (4848)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Dobermann Pincher மற்றும் Dashound நாய்க்குட்டிகளும், ஒரு Dashound ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4885)

## ஊசி மருந்து விற்பனை

நாய்களுக்கு உரிய Parvo Distemper ஊசி மருந்துகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (4884)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima புறொயிலர் குஞ்சுகளும், சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் லேன், முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4849)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4763)

## தேவை

சமையல் செய்து வீட்டைப் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. நல்ல சம்பளம் தரப்படும். உடன் நேரில் வரவும். தொடர்பு: தனபாலசிங்கம், 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4886)

## தவறிவிட்டது

ஜெ.ஜனனி என்பவருடைய இரு அடையாள அட்டைகளும் குறிப்பிட்ட ஒரு தொகைப் பணமும் யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்க. வீ.ஜெயரத்தினம் மேதர்ஸ் லேன், மானிப்பாய். (4881)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை கிழக்கில், அரசடி ஒழுங்கையில், மானிப்பாய் வீதிக்குச் சமீபமாக 41/2 பரபபுக் காணிக்குள் அமைந்த (சகல வசதிகளோடு நல்ல வருமானமும் கொண்ட) நல்ல வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ரதி கனகசபை, அரசடி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (4850)

அளவெட்டியில் (அளவை ஊரில்) நிலத்துடன் தனி வீடு விற்பனைக்கு உண்டு. மேலதிக விவரங்களுக்கு Mr.K.Nithiyanantham, C/o Miss S. Kandiah, Vel-inn Alaveddy - South, Alaveddy. (C/22519)

## காணவில்லை

மா வெள்ளை நிறமுடைய கழுத்தில் பிறவுண் நிறமும் குத்துக் கொம்புமுடைய பெரிய ஏரி கொண்ட நாம்பன் மாட்டை 06.06.2002 தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். K.சதாசிவம், 352, அரசடி வீதி, நல்லூர். (4878)

## மீண்டும் சோதனை ஆரம்பம்

இணுவில்,ஜூன்16

பலாலி வீதிப் பகுதியில் கண்ணி வெடி சோதனைகளை இராணுவப் பிரிவினர் மீண்டும் மேற்கொண்டுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு மேற்கொள்ளப்படாதிருந்த இச்செயற்பாடு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. படையினர் பற்றைகள், மரங்கள், வேலிகள் போன்ற பகுதிகளை கருவிகள் மூலம் சோதனையிடுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (13-ரி)

## வாய்க்கால் புனரமைக்கக் கோரிக்கை

கமத்தொழில் சேவை திணைக்களத்தால் கடந்த வருடம் புனரமைப்புக்காக அங்கீகரிக்கப்பட்ட கரவில் - பழுதணை நீர்ப்பாசன வாய்க்காலை புனரமைத்து உதவுமாறு யாழ். மாவட்ட கமத்தொழில் ஆணையாளருக்கு மாசேரி விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 20 வருடங்களாக இது புனரமைப்பிற்கு உட்படுத்தப்படவில்லையென்பதும், இதனாலேயே கடந்த வருடம் 250 ஏக்கர் நெற்பயிர் அழிவுக்குள்ளாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (13-ரி)

## லொறி விற்பனைக்கு

B.M.C. நோமல் லொறி (கம்பஹாவைச் சேர்ந்தது) 24 சிறி 5152 விற்பனைக்கு உண்டு. லொறியை யாழ். நாகவிகாரைக்கு அருகில் பார்வையிடலாம். இதன் விலை ரூ.1,40,000/=. (4880)

## பீடி புகையிலை தேவை

யாழ்.குடாநாட்டில் விளைவிக்கப்பட்ட பீடி புகையிலை தரத்துக்கேற்ப நியாய விலையில் வாங்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**ஆர்.வி.ஜீ. பீடி ஸ்தாபனம்,**
58, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4861)

## உடன் தேவை

### விருந்தினர் விடுதிக்கு காவலாளிகள் தேவை

யாழ்.நகரிலுள்ள விருந்தினர் விடுத்திக்கு காவலாளிகள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். நேரில் வரவும்.

**மனித வள அலுவலர்,**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-22532)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வடமாகாண தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நெறியாளர் குழு உறுப்பினருமாகிய

### தம்பிராசா செந்தில்ராசா

அவர்களின் திடீர் மறைவையொட்டி நாம் மிகவும் துயருறுகின்றோம். இவரது மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்: 23.10.1946
மறைவு: 13.06.2002
*330, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.*

யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்க
நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள். (சி-22534)



TATA

**TATA**



In Search Excellance

# THIRUGNANAS ACCOUNTANCY
## TRAINING ACADEMY (TATA)

ரூபா 580,000 மாத சம்பளம்

**SPONSORED BY INTERNATIONAL ENGLISH FACULTY IN ASSOCIATION WITH ANGLO AMERICAN UNIVERSITIES**
**PROFESSOR THIRUGNANAS CONSORTIUM UNLIMITED**

(for the promotion of knowledge based HI-tech Moral and Humanitarian Society)
141, Power House Road, Central Bus Terminus, Jaffna, Sri Lanka.

Wonderful and marvellous opportunity, nowhere else in the world, to qualify and pass, with places and prizes all sections in just three years. While studying for these two globally Recognized London examinations in Jaffna itself, TATA Students will be coached intensively to pass and obtain IO Certificates, 4 Diplomas, 4 Associate degrees, 2 degrees, ACCA, ACMA, ASCMA, ABE, with no extra fees and will be eligible to complete MSc, MBA, CPA, MCIM, with ease by further paying fees pervailing at the time.

Expected global demand for ACCA or ACMA with 1st or 2nd degree is in the salary range of Sterling Pounds 30,000 to 50,000 which is equal to SL Rs. 350,000 to 580,000 per month plus car, bonus etc.

மாதச் சம்பளமாக ரூபா 5,000 உழைக்கும்படி, செய்யவேண்டியவை உடனடியாக TATA இல் பதிவுசெய்யவும்.

TATAக்கு தலைமை வகிப்பவர் உலகிலேயே கணக்கியல் சார்ந்த அதிகூடிய பட்டங்களைப் பெற்றவர். அவர் அமெரிக்க சர்வகலாசாலைகளால் அனுமதிக்கப்பட்ட பீடாதிபதியும், பேராசிரியரும் கலாநிதியுமாகிய வெற்றிவேல் திருஞானசம்பந்தர். அவருடைய பட்டங்கள் பதினாறுக்குமேல் அவையாவன:- MCom, phD, DCom, CPA, FTII, FSCMA, RA, AA, MCIM (UK), ACIS (UK.) ACCS (UK), MBIM (UK), FCCA (UK), FCMA (UK), ACA (NIG), ACCA (UK), MIIA (AUST), FBIM (UK), COMPLETED CIMA & ACCA IN THE SAME YEAR WITH CREDITS. இவர் 55 ஆண்டுகாலம் தொடர்ந்து கணக்கியலையும், அது சார்ந்த துணையான கணக்காய்வு, நிதியியல், பொருளியில், வர்த்தகம், நிர்வாகம், முகாமைத்துவம், பங்குடமை சார்ந்த சட்ட நுணுக்கங்களையும் புள்ளிவிபரவியல், உளவியல் போன்ற பல சோதனைகளிலும், சந்தைப்படுத்தும் அறிவியல் செயற்பாட்டிலும் ஆய்வுகளிலும் போதனைகளிலும் இடைவிடாது ஈடுபாடு கொண்டவர். மேலும் 40 ஆண்டுகளாக கணக்கியல் வருமானவரி ஆலோசகராக "திருஞானாஸ்" என்ற நற்பெயரில் ஆசானாக உலகிலேயே மிகக்கூடிய வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மிகக் கூடிய Balance Sheet Certify பண்ணியவர்.

பிரித்தானியாவிலுள்ள கேம்பிறிச் சர்வதேச வாழ்க்கை வரலாற்று நிலையத்தினால் "சாதனை மிக்க மனிதர்" என 1981இல் பட்டியல் இடப்பட்டு பிரபல்யமானவர்.

இவர் தனது பிற்பகலில் தமது மண்ணின் இளைஞர், யுவதிகள் மேம்படுத்தப்படவேண்டும். அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டுமென நல்ல உள்ளார அபிலாசைத் தூண்டுதலால் 'TATA' க்குத் தலைமை வகிக்க தாராளமனதுடன் முன்வந்துள்ளார்.

மேலும் கடந்த 7 வருடங்களில் இவர் கொழும்பிலிருந்து (MCIM) இலண்டன் பட்டயம் பெற்ற சந்தைப்படுத்து நுண்ணறிவியல் அறிஞராகவும் (FSCMA) சிரேஷ்ட முகாமைக் கணக்காளராகவும், (CPA) சேட்டிபைட் பகிரங்கக் கணக்காய்வு அறிஞராகவும், (FTII) சிரேஷ்ட வரிவல்லுநராகவும், (MIIA) ஆஸ்திரேலிய உள்ளகக் கணக்காய்வாளராகவும், அறிவு, ஆய்வு, அனுகூலங்களையும் சேர்த்து, விரிவுரையாளராக, பேராசிரியராக, நிர்வாகியாக, பெரிய கொம்பனி அத்தியட்சகர்களுக்கு ஆலோசகராக அனுபவம் பெற்று தமது சொந்த மண்ணின் மைந்தர்களை, யுவதிகளை (KNOWLEDGE BASED HI-TECH MORAL AND HUMANITARIAN SOCIETY MEMBERS) உயர் தொழில் நுட்பத்தையும் அறிவு அடிப்படை சால் ஒழுக்க ஜீவகாருணிய சமூகத்தினராக்க ஆவலும் அபிலாசையுமுடையவர்.

ஆகவே, இடத்துக்கு முந்துங்கள் (முதல் மாடி 50, இரண்டாம் மாடி 40) முதல் (SEMESTER 01.09.2002இல் ஆரம்பமாகிறது. முதல்படியாகப் பதிவுக் கட்டணம் Sterling Pounds 265. 15.08.2002க்கு முன் செலுத்தப்பட வேண்டும். மிகுதி FEES மொத்தமாக, அல்லது தவணை முறையில் செலுத்தலாம். மிகுதி விவரம், விளக்கம் நேரில்.

**BURSAR / RECTOR,**
**TATA Thirugnanas Buliding,**
**141, Power House Road, Jaffna.**

(4892)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை சகல தரப்புகளும் பேண வேண்டும்!

## அமைதிச் சூழல் நிம்மதி தருகின்றது என்கிறார் அமைச்சர்

யாழ்ப்பாணம்,ஜுன்.16

மூன்று தசாப்த காலமாக நாம் அடைந்த நிம்மதியின்மை நீங்கித் தற்பொழுது அமைதி ஏற்பட்டுள்ள சூழலில் எமது யாழ்ப்பாண விஜயம் மிகவும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்பொழுது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை என்பன சகல தரப்பினராலும் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்தைப் பரந்த கண்ணோட்டத்துடன் பார்க்கின்ற ஒரு தலைவர் எமக்குக் கிடைத்துள்ளார். இரவு பகல் என்று பாராமல் அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார்.

பல்வேறு இனங்களைக் கொண்ட மக்கள் வாழ்கின்ற நாட்டில் நிலையான சமாதானத்தையோ ஒற்றுமையையோ உடனடியாக ஏற்படுத்தி விட முடியாது. குறைபாடு சொல்லுதல், குற்றஞ் சுமத்துதல், கல் வீச்சில் ஈடுபடுதல் போன்ற செயல்கள் இலகுவானது. எமது பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் நல்லதொரு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும். நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்று கூறவேண்டும்.

கடந்த 30 வருடங்களாக இடம்பெற்ற போரினால் யாருமே வெற்றி பெறவில்லை. பல இழப்புகளும் நஷ்டங்களும்தான் மிச்சம். போர் எதையும் இந்த நாட்டில் விட்டு வைக்கவில்லை. ஆலயங்கள், பாடசாலைகள், மக்கள் இருப்பிடங்கள் யாவும் பெரும் அழிவுற்றுள்ளன.

தற்பொழுது ஆரம்பமாகியுள்ள பயணம் மிகவும் அழகான பயணம். நிம்மதியான பயணம். இந்தப் பயணம் தொடரவேண்டும் என்பதே சகல மக்களினதும் விருப்பமாகும். யுத்தத்தால் அழிவுற்ற வடக்கு - கிழக்கு பகுதிகளைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். மறைமுகத் திட்டங்கள் எதுவும் எம்மிடம் இலலை. நல்நோக்குடன் வேலை செய்வோம். நாட்டைக் கட்டியெழுப்பும் தேவை அனைவருக்கும் உண்டு. மனச்சாட்சிக்கும், இறைவனுக்கும், மக்களுக்கும் பதில் சொல்லக்கூடிய வகையில் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைபபோம் - என்றார் அமைச்சர் பாக்கீர் மாக்கார்.

### அஸ்வர் உரை

நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் நான், இங்கு மகிழ்ச்சி கொள்ளாமல் எங்கு மகிழ்ச்சி கொள்வது. ஆயினும் இங்கு உடைந்த உள்ளங்களை மட்டுமல்ல உடைந்த இல்லங்களையும் கண்டோம்.

கடந்த இரு தசாப்தத்துக்கும் மேலாக நீங்களும் தனியே வாழ்ந்தீர்கள், நாங்களும் தனியே வாழ்ந்தோம். இனியாவது வாழ்க்கையை மலரச்செய்வோம் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலரும் உரையாற்றினார்கள். (ஐ-10-8-ரி)

### வைப்பகத்தில் இருந்து மக்களுக்குக் கடிதம்

தென்மராட்சி,ஜுன்16

1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை தமிழீழ வைப்பகத்தில் தங்க நகைகளை அடைவு வைத்த யாழ். குடாநாட்டு மக்களுக்கு அந்த நகைகளை மீட்பதற்கான கடிதங்கள் வைப்பகத்தினால் அனுப்பப்பட்டுள்ளன.

அடைவு நகைகளை மீட்பதற்கும், வட்டியைச் செலுத்திப் புதுப்பிப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)

## விசேட கூட்டம்

இன்ரறக்ட் கழகத் தலைவர், செயலாளர், தெரிவுத் தலைவருக்கான விசேட கூட்டம் இன்று (16-06-2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

*இடம்:-* **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*நேரம்:-* **பிற்பகல் 3.30 மணி.**

அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

றோட்டறிக் கழகம்,
யாழ்ப்பாணம்.

(C/22549)

இன்றும் நாளையும் மட்டும்
யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் ஆதரவில்

மூன்றாவது மனிதன்
புத்தகக் காட்சியும் விற்பனையும்

கலை, இலக்கியம், விமர்சனம், மொழியாக்கம், சமூகவியல்,
அறிவியல், கணனியியல், மருத்துவம்,
மற்றும் துறைசார் நூல்களும் சிறு சஞ்சிகைகளும்
2002.யூன் 16,17 களில் 10 மணி முதல் 5 மணிவரை
யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில்

வினிதா ஸ்ரோர்ஸ்
கரணவாய் கிழக்கு, கரவெட்டி

## நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

### மஹா கும்பாபிஷேகம் 21~06~2002

*ஆரம்பம்:* நாளை 17.06.2002 திங்கட்கிழமை காலை.

*எண்ணெய்க்காப்பு:* 20.06.2002 வியாழக்கிழமை
காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை.

**மஹா கும்பாபிஷேகம் 21.06.2002 வெள்ளிக்கிழமை**
**காலை 10.00 மணிக்கு நடைபெறும்.**

பிரதிஷ்டா பிரதம குரு: முத்தமிழ் குருமணி
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள்
(சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தானம்)

- ஆலய பரிபாலன சபையினர்.

(4916)

யாழ். – கொழும்பு சொகுசு பஸ் சேவையில் பயணம் செய்ய

நீங்கள் யாழ்ப்பாணத்தில் நாடவேண்டிய இடம்:

யோகாஸ் ஆடையகம்
18A,நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P.021 - 2138, 2139

ஸ்ரீமுருகன்
303, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 - 2670,3588

பயணம் செய்கின்ற அனைவருக்கும் தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

கொழும்பில் தொடர்புகொள்ளவேண்டிய இடம்:

ARTHY PAARK
Communication & Lodge with
Attached Bathroom & Attached Kitchen
9, 47 th Lane, Wellawatte, Col. -06.
T.P:074 - 519759, 506286,
594835.

கைலஷ்
கொமினிகேஷன்
362/1, அளுத் மாவத்தை,
கொழும்பு -15
T.P.: 526404, 526405

(C/22550)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்

**அமரர் தம்பிராசா செந்தில்ராசா (சிவா)**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். சிறந்த கூட்டுறவாளனும், சமூக சேவையாளனுமாகிய அமரர் அவர்களின் இழப்பு கூட்டுறவுச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் இழப்பால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமரரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பணியாளர்.
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,யாழ்ப்பாணம்.

(C/22551)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு
1944 - 02 - 29



விண்ணில் பிறப்பு
1998 - 06 - 16

**திருமதி கே.ரி.லாசறஸ் லூர்துமலர்**

அம்மா! எம்மைத் தரணியில் தவிக்க விட்டுவிட்டு
எங்கு நீ சென்றாயோ?
நான்காண்டுகள் சென்று விட்டதம்மா! - உன்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டு இன்னும்
நீங்கவில்லையே? தாயே!

மகன்:
*Br.றெஜினோல்ட்,*
*அருள் ஆச்சிரமம்,*
*யாழ்ப்பாணம்.*

*உந்தன் பிரிவால் துயருறும்:*
கணவர்: கே.ரி.லாசறஸ்,
பிள்ளைகள், மருமகள், உறவினர்கள்,
*தோலகட்டி, வசாவிளான்.*

(4902)

ORGAN NOTES
விற்பனைக்கு

தமிழ் சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் விற்பனைக்குண்டு. இசை பயிலும் மாணவர்களுக்கேற்ற விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டது.

By.L.B.ANTON DIAS
49, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(4912)

தொடர்புகொள்ளவும்

வெளிநாடுகளுக்கு பார்சல்கள்,
வீடியோ கசட்கள் முதலியன
பாதுகாப்பாகவும் விரைவாகவும்
அனுப்பிவைக்கப்படும்.
விவரங்களுக்கு:-
வீ.என்.ஆர். சென்ரர்,
227, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(4911)

நாகம்ஸ் சுன்னாகம்
அருண்குமார், சுமிதா,
ரஞ்சித், மனோரமா நடித்த
பாண்டவர் பூமி
(சீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்)
இனிய பாடல்கள் நிறைந்தது.
(4905)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
விஜயகாந்த், லைலா, மணிவண்ணன்
நடித்த
கள்ளழகர்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/22538)

நிறஞ்சனாஸ்
சங்கானை
ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடித்த
ரோஜாக்கூட்டம்
(சீலஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-22539)

R.B.BOOKING CENTRE

யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் இனிய நற்செய்தி!

பல வருட காலங்களாக யாழ்ப்பாண மக்களுக்கு
யாழ்.-கொழும்பு மற்றும் தூர இடங்களுக்கான
பஸ் சேவையை
மிகமிகச் சிறப்பாக நடத்திவந்த ஆசனப் பதிவகத்தினர்
தற்பொழுதும்
தமது வான் சேவைகளையும், பொதி அனுப்பும் சேவைகளையும்
ஒருங்கே சிறப்புறச் செய்துவருகின்றார்கள்.

யாழ்.-கொழும்பு வான் புறப்படும் நேரம்:

அதிகாலை 4.00மணிமுதல் காலை 7.00 மணிவரையும்

| | | |
|---|---|---|
| பயணக் கட்டணம்: | யாழ்.–கொழும்பு | 1000/= |
| | யாழ்.–வவுனியா | 700/= |
| | யாழ்.–திருகோணமலை | 1000/= |

"உங்கள் திருப்தியே எங்கள் சேவை"

ஆர்.பி(B) பஸ் ஆசனப் பதிவகம்

15,கிராண்ட் பஜார், யாழ்ப்பாணம்.

*உரிமையாளர்:* திரு. V.இராஜரட்ணம் (செல்வம்)

☞ 'செல்வம்' என்ற எனது பெயரைப் பயன்படுத்தி யாழ்நகரில் பல ஆசனப் பதிவு நிலையங்கள் இயங்குகின்றன. அவற்றுக்கும் எனக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை.

(4903)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சொர்ணம்மா நல்லதம்பி

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம்மா நல்லதம்பி அவர்கள் 14.06.2002 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல கொழும்பு வர்த்தகர் செல்லர் நல்லதம்பியின் அன்புத் துணைவியாரும் காலஞ்சென்றவர்களான பழநி ராமசாமி தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான செல்லர் சின்னாசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-06-2002) ஞாயிற்றுக்கிழமை ஜெயவர்த்தனபுர மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பிற்பகல் 3 மணிக்குப் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு.*
T.P. No.- 555173

தகவல்:
ந.நிமலன் (பேரன்)

(4909)

### தம்பிராசா செந்தில்ராசா (சிவா)

(யாழ். பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் ஸ்ரார் சனசமூக நிலைய முன்னாள் தலைவரும் போஷகரும்)

8/8 கற்குளம் ஒழுங்கை, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா செந்தில்ராசா அவர்கள் 13.06.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கேசரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும் பிறேமரஞ்சினி அவர்களின் அன்புக் கணவரும் சின்னராசா - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் திருமதி சந்திரகுமார் சுனித்திரா, சிவதர்சினி, அனுசியா, அஜந்தா, டர்மிலா, டனிஸ்ரன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8/8 கற்குளம் ஒழுங்கை,*
*கொட்டடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
சந்திரகுமார்
(மருமகன்)

(4917)

ரஜமகா விகாரை தங்கச் சிலைகள்

# புளியங்குளத்தில் திருடப்பட்டவை; அனுராதபுரத்தில் மீட்கப்பட்டன!

வவுனியா,ஜுன்16

புளியங்குளம் வேரகல ரஜமகா விகாரையில் இருந்து திருடப்பட்ட தங்கச் சிலைகள் அனுராதபுரத்தில் ஒரு வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரை விசாரணை செய்த போது, குறிப்பிட்ட வீட்டில் தங்கச் சிலைகள் வைத்திருப்பது தெரியவந்தது. இவரகு [illegible]டுத்து குருநாகல், எப்பாவல, மதவாச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், வான், துப்பாக்கி ஒன்று மற்றும் கத்தி, துப்பாக்கி ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ-9-6)

# வவுனியாவில் கடத்தப்பட்ட இளைஞர் தப்பிவந்தார்!

வவுனியா,ஜுன்16

வவுனியா முருகனூர் பகுதியில் கடந்த மார்ச் மாதம் கடத்தப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று வவுனியாவுக்குத் தப்பிவந்து சேர்ந்துள்ளார்.

புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் சோழன் உட்பட நால்வரால் இந்த இளைஞர் கடத்தப்பட்டு மட்டக்களப்பில் தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிவிக்கப்படுவதாவது:-

முருகனூர் பகுதியில் விறகு பொறுக்கச் சென்ற சமயம் ரகுலேந்திரன் சசிப்பிரியா என்ற சிறுமி கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி காணாமற்போனாள். அவரைத் தேடி அவரது சகோதரரான லோகதிலீபன் (வயது17) முருகனூர் காட்டுப் பகுதிக்குச் சென்றார். அங்கு அவரை வழிமறித்த புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான சோழன் உட்பட நால்வர் அவரைக் கடத்திச் சென்றனர்.

பின்னர் அவர் மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள வீடு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டார்.

அங்கிருந்து தப்பிய இவர் நேற்று வவுனியா வந்து சேர்ந்தார்.

அவர் வவுனியாவில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு வந்தார். கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்கும் சென்றார்.

பின்னர் அவர் விடுதலைப் புலிகளால் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-3)


CAREER. COM INSTITUTE
2002 டிசெம்பர் பரீட்சை எழுதும் AAT மாணவர்களுக்கான
விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
காலம்:- 22.06.2002 மு.ப. 11.00 மணி.
இடம்:- இல.7[illegible], பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
(யாகப்பர் ஆலயத்திற்கு முன்பாக)
தொடர்பு நேரம்:- வார நாள்களில் 10மு.ப.-2பி.ப.
வார இறுதி நாள்களில் 10மு.ப.-3பி.ப.
- நிர்வாகி.
(C/22543)



இளமை மற்றும் அழகின்
ரகசியம்




தினம் இரண்டே கேப்ஸ்யூல்கள்
பயோட்டின் - H250
உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

மேலும்
1. தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக்கூடிய முடி
2. சரும நோய், தோல் சுருங்கி வயதான தோற்றம், காய்ந்த சருமம்
3. சீரற்ற உடையக்கூடிய நகம்
போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற BIOTIN H உதவுவதாக விஞ்ஞானரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.

எமது அபிமான வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!
அனேகமானோரின் வேண்டுகோளுக்கிணங்க தற்பொழுது
யாழ்நகரின் எல்லா முன்னணி பார்மஷிகளிலும்
BIOTIN H250 கிடைக்கப்பெறும்.
ஆர்கெம் - கொழும்பு.
தொ.இ. 01-470290, 077-805738.
E-mail: arkem@sltnet.lk


## திருடன் பிடிபட்டான்

தென்மராட்சி,ஜுன்16

வர்த்தக நிலையமொன்றில் பணி புரிந்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த யுவதி ஒருவரின் சங்கிலியை சைக்கிளில் வந்த திருடன் அறுத்துக் கொண்டு ஓடிய சம்பவம் நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கடந்த 10 ஆம் திகதி யுவதியினால் அடையாளம் காட்டப்பட்ட திருடன் பிடிக்கப்பட்டு நெல்லியடிப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான் (13-117)

## வயோதிப தம்பதி மீது தாக்குதல்!

தென்மராட்சி,ஜுன்16

வயோதிபத் தம்பதியொன்று தாக்குதலுக்குள்ளான சம்பவம் சமீபத்தில் துன்னாலை தெற்குப் பகுதியில் நடைபெற்றது.

இச்சம்பவத்தில் சி.மார்க்கண்டு (வயது 70), வள்ளிப்பிள்ளை மார்க்கண்டு (வயது 67) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் அல்வாய்ப் பகுதியிலும் இவ்வாறு வயோதிபத் தம்பதியினர் தாக்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-13-117)

## குற்றச் செயல்கள் அதிகரிப்பு

கொழும்பு,ஜுன்16

இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களில் என்றுமில்லாத அளவிற்கு நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

இக்கால எல்லைக்குள் 321 படுகொலைகள், 184 ஆள்கடத்தல் சம்பவங்கள், 1,387 கொள்ளைகள், 23 கப்பம் பெற்ற சம்பவங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன என பொலீஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறியல் செய்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயத்தைக் கேள்வியுற்ற 524ஆவது படையணி அதிகாரி அங்கு வந்து மீனவரின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

மீனவரின் கோரிக்கையை அவர் ஏற்றுக்கொண்டதை அடுத்து வீதித் தடைகள் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


தேவை
கணனியில் (போட்டோ சொப்)
Photo Shop
Photo Editing
இவற்றில் அனுபவமுள்ளவர்கள்
நேரில் வரவும்.
(C/22548)
தொடர்பு:
SRI DIGITAL COLOUR LAB
14,Sri Vengadesan Vethy,
Jaffna. T.P:3493


## தீவுப் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தார். அந்தப் பகுதிக்குள் புலிகள் பிரவேசிப்பதாயின் அவர்கள் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் என்ற பெயரில் பன்னிரெண்டு நிபந்தனைகளை கடற்படையினர் கண்காணிப்புக் குழு ஊடாகப் புலிகளுக்கு வழங்கியிருந்தனர்.

நிபந்தனைகள் விதித்ததன் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கையை படையினர் மீறியதாகப் புலிகள் குற்றஞ் சுமத்தினர். இதனால் நெருக்கடி நிலைமை உருவானது.

தீவக நிலைமை தொடர்பாக இரு தரப்புகளுக்கும் இடையே மீண்டும் ஓர் இணக்கத்தை ஏற்படுத்த போர் நிறு[illegible] கண்காணிப்புக் குழு முயன்று வந்தது.

இது விடயத்தில் தற்போது இரு தரப்புகளும் ஓர் இணக்கத்துக்கு [illegible]துள்ளதாகக் கண்காணிப்புக்குழு கூறுகின்றது.

கடற்படையினர் விதித்த நிபந்தனைகளுக்குப் பதிலாக மாற்று யோசனை ஒன்றைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட் முன்வைத்து அதற்கு அரசு, புலிகள், கடற்படை ஆகிய முத்தரப்புகளினதும் இணக்கத்தைப் பெற்றுக் கொண்டார் - என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இணக்கத்தின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நாளை தீவுப் பகுதிக்குச் செல்லவிருக்கின்றனர் - எனறு கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதித் தலைவர் ஹேறாஹறான் பக்லண்ட் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவின் மாற்று யோசனைகள், புதிய நிபந்தனைகள் தொடர்பான விவரங்களை வெளியிட கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர்.

### மக்கள் வரவேற்பு

இதேவேளை -

நாளை தீவுப் பகுதிக்குச் செல்லவிருக்கும் போராளிகள் குழுவை அல்லைப்பிட்டிப் பகுதியில் வைத்து வரவேற்று அழைத்துச் செல்ல பொதுமக்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

நாளை முற்பகல் 11மணிக்கு அல்லைப்பிட்டியில் போராளிகளுக்கு பெருவரவேற்பு அளிக்கப்படும்.

பொதுமக்கள் கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ஒன்று பிற்பகல் 3 மணிக்கு வேலணைத் துறையூரில் நடைபெறும்.

தீவகத்தின் பல இடங்களுக்கும் செல்லும் போராளிகள் பொதுமக்களோடு கலந்துரையாடுவர்.

1990ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் தீவகத்தில் உயிரிழந்த போராளிகளின் புகழுடல்கள் விதைக்கப்பட்ட சாட்டிப் பகுதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தவும் ஏற்பாடாகியுள்ளது. (ஐ-3-16)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சமாதானக் குழு வழங்கிய வினாக்கொத்தைப் பூர்த்தி செய்து இரு தரப்பும் நோர்வேயிடம் கையளித்தது என்றும் -

அதனடிப்படையில் நிகழ்ச்சி நிரல் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும்-

தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

நோர்வே சமாதானக் குழுவின் பிரதிநிதிகள் குழு அடுத்தவாரம் கொழும்பு வரவிருக்கின்றது.(ஐ-3)

## மீனவர் உடற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கின்றனர்.

யாழ்.செயலகத்தில் நாளை இடம்பெறும் மாநாட்டில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டவுள்ளதாக மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் மீனவர்களுக்கான பாஸ் நடைமுறை, உடற்பரிசோதனை ஆகியன நீக்கப்படுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-3-51-ரி)


இறைச்சிக்கோழி விற்பனைக்கு
கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்ற வயிரா பாம் இறைச்சிக்கோழி, பிக்போல்ஸ், சொயன் சீயஸ் மற்றும் - பாட்ஸ் துண்டுகளும் விற்பனைக்கு உண்டு.
எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: T.கரன்,
முட்டைக் கடை (அப்பிள் கடை), 150, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(4825)



MARBLES FLOOR POLISHING SERVICES
மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை
பழைய ரெறாசோ நிலங்களையும், ஏனைய நிலங்களையும்
மெஷின் மூலமாக மினுக்கி, புதுமெருகூட்டி
அழகாக்க நாடுங்கள்:
மாபிள்ஸ்
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P. 2328.
தொல்புரம், சுழிபுரம்.
(C/22315)
நாம் முன்னர் வேலைசெய்த நிலங்களுக்கு கழிவு உண்டு.
புதிதாகப் போடும் ரெறாசோ
வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும்.



நீண்டகால இடைவெளியின் பின்னர்....
யாழ்.மண்ணில்....



'புலிகளின் குரல்' கலைஞர்கள்
சங்கமிக்கும் மாபெரும் விழா
முத்தமிழ்க் கலையரங்கம்



இடம் : நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபம்
காலம் : இன்று ஞாயிறு பிற்பகல் 4.00 மணிமுதல்(பழைய நேரம்)
அனைத்து தமிழ் உள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்...!
- புலிகளின் குரல் நிறுவனம்.
(C/22552)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.